
பராபவ ஹ ஐப்பசி மீ
அக்டோபர் - நவம்பர் 2026

மலர்: 9
இதழ்: 7

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

தேஸிக ஸந்தேஸம்



MONTHLY NEWSLETTER FROM:
SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM
MYLAPORE, CHENNAI - 600 004.
: +91 77086 53799 ☎ : 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com

SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM'S

New Multi-purpose Facility

(Ground Floor)



Sri Vedantha Desikar Devasthanam's **'Kamala Thothadri Hall' (A/C),** a new Multi-purpose Facility for conducting **small functions, upanyasams, music programmes,** etc., available for rent at No. 25/13, Chitrakulam South Street, Mylapore, Chennai - 600 004.





Further details can be had at the temple office.

+91 77086 53799,

☎ : 044-24953799,

044-43863747.

பராபவ வரு ஐப்பசி மீ
அக்டோபர் - நவம்பர் 2026

மலர்: 9
இதழ்: 7

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

தேஶிக ஸந்தேஶம்

திருக்கோவிலில் தினசரி பூஜா காலங்கள் *

காலை		மாலை	
6.30	விச்வரூபம்	4.00	ஸந்நிதி திறப்பு
8.30	திருவாராதனம்	8.00	திருவாராதனம்
9.45	சாற்றுமுறை		
11.30	உச்சிகாலம்	9.00	சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

தர்மகர்த்தாக்கள்:
ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன் | ஸ்ரீ P. ஸ்ரீஹரி | ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன்

Editorial Board :
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை - 4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed by: ye**SK**ay designs



ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
மயிலாப்பூர், சென்னை - 600004.
: +91 77086 53799 ☎ : 044 - 24953799, 044 - 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:



ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்[3]ரி ஸமம் ஸ்தா[2]நம் ப்[3]ரஹ்மாண்டே[3] நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே[3]வோ ந பூ[4]தோ ந ப[4]விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

விசிஷ்டாத்வைத தத்வத்தில் 'ப்ரதான ப்ரதிதந்த்ரம்' என்பது, பிற தத்வ (அத்வைதம், ந்யாய வைசேஷிகம், சாங்க்யம் போன்ற) அமைப்புகளில் இருந்து இந்த சித்தாந்தத்தை முற்றிலும் வேறுபடுத்திக் காட்டும் தலையாய தனித்துவக் கொள்கையைக் குறிப்பதாகும்.

வேதாந்த ப்ரமேயங்களை ஆராயும் பொழுது பகவான், ஜீவன் மற்றும் அசித் என்னும் ஜடப்பொருள்கள் என்று தத்வங்கள் மூன்றாகத் தேறுகின்றன. இந்த தத்வங்களில் ஸ்ரீமந்நாராயணன் மற்ற இரண்டு தத்வங்களுக்கும் ஆத்மாவாகவும், சரீரியாகவும் அதாவது ஜீவாத்மாக்களுக்கும் அசித்துக்களுக்கும் உடையவனாகவும் தாங்குபவனாகவும் உள்ளான். ஜீவாத்மாக்களும் ஜடப்பொருள்களும் எம்பெருமானுக்கு சரீரமாகவுள்ளன என்றும் வேறுபடக் கூறலாம். இதையே ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்வாமி தேசிகன் திருநாரணன் என்னும் தெய்வமும் சித்தும் அசித்தும் என்னும் என்று அருளுகிறார். இங்கு எம்பெருமான் ஆத்மாவாகவும் சித்தும் அசித்தும் அவனுக்கு சரீரமாகவும் இருப்பதுமே ப்ரதான ப்ரதிதந்த்ரம் என்று அறியப்படுகிறது.

மேலும், இங்கு சரீரத்தைக் குறிப்பதற்கு ஸ்வாமி ஸ்ரீதேசிகன் மூன்று இலக்கணங்களைக் காண்பிக்கிறார். அவையாவன: (1) ஆதேயத்வம் - எம்பெருமான் ஜீவர்களையும், அசித்துக்களையும் தாங்குவதாலேயே அவை இருப்புப் பெறுகின்றன, (2) விதேயத்வம் - இந்த இரண்டும் அவனின் ஸங்கல்பத்திற்கு (கட்டளைக்கு) உட்பட்டு இயங்குகின்றன மற்றும் (3) சேஷத்வம் - எம்பெருமானின் இன்பத்திற்காகவும் கைங்கர்யத்திற்காகவும் மட்டுமே இவை ஏற்பட்டவை என்பன. வரும் இதழ்களில் ஸ்வாமி தேசிகனின் அருத்த பஞ்சகம் எனும் ப்ரபந்தத்தைக் கொண்டு மேலும் விளக்குவோம்.

இந்த தத்வங்களையும், இதை அறிந்து கொண்டவன் அந்த எம்பெருமானை அடையும் வழிகளையும், அவனை அடைந்த பின் அதனால் கிடைக்கப்பெறும் பயனையும் இந்த ஐப்பசி மாதத்தில் அவதரித்த இன்கவிகளான அருளே ஒருவடிவாக அமைந்த பொய்கையாழ்வாரும், கடல்மல்லை காவலரான பூதவேந்தும், திருக்கண்டேன் என உரைத்த தமிழ்த்தலைவனும் தத்தம் திருவந்தாதிகளில் பரக்க அருளுகின்றனர்.

புரட்டாசியில் நம் ஆசார்யரின் வார்ஷிக உத்ஸவம் மற்றும் பவித்ரோத்ஸவத்தின் படத் தொகுப்புடன், சிறப்புக் கட்டுரைகள் மற்றும் வழக்கமான தொடர்களுடன் ஐப்பசி மாத தேசிக ஸந்தேசம் உங்கள் கரங்களில். ❇

ஸ்ரீ:

Divine Ambience, Devoted Service: The Festive Aura Continues

FROM THE DESK OF TRUSTEES

With the divine grace of Sri Alarmelmanganayika Sametha Sri Srinivasa Perumal and the boundless blessings of Sri Vedantha Desikan, **the Acharya's Vaarshika Utsavam and Pavitra Utsavam,** the annual purification ritual, concluded on a deeply fulfilling note at our Devasthanam. The celebrations were marked by a divine ambience and typical grandeur, made possible through the excellent coordination of the various wings of the Devasthanam. We extend our heartfelt gratitude to the Archakas, Maniyakarars, Madaippalli staff, Office staff, Ubhaya Veda goshti, Sripadam kainkaryam, among others. We hereby record our sincere thanks to all the kainkaryaparas who contributed immensely to make this possible.

A highlight of the Pavitrotsava Mahapurnahuthi was the gracious presence of HH Poundarikapuram Srimath Andavan Srinivasagopala Mahadesikan. His Holiness was duly received with temple honours, and his participation during the Homam, Parayanam and Maha Purnahuthi, added significance to the occasion.

The Trustees wish to record their heartfelt appreciation for the exemplary service rendered by the Sri Vaishnava Sripatham Kainkaryam Association during the 10-day annual festival. The kainkaryaparas discharged this responsibility with remarkable devotion, discipline, and dignity, and this greatly enhanced the sanctity and solemnity of the occasion.

It is this spirit of selfless service, a hallmark of the various kainkaryaparas, that sustains the spiritual atmosphere of our Devasthanam, while bringing great joy to the large number of devotees who participated in the utsavam.

Navaratri and Peyazhwar Utsavam

Currently, the Navaratri Utsavam (Oct. 12 to 20) and the 10-day Peyazhwar Utsavam (Oct. 13 to 22) are underway, continuing the festive aura of the Devasthanam.

The Navaratri festival is one which is looked forward to with eagerness. Each day, Perumal and Thayar are decorated in the manner resembling the Divya Dampathis of various Divyadesams like Srirangam, Thiruvenkatam, Kancheepuram, Thiruvaheendrapuram, Thirukkudandhai and Thiruvallur, and taken in procession in a majestic and leisurely gait inside the temple (Pathi Ulaathal), leading up to Oonjal. The Asthanam at Kannadi Arai also provides the devotees with a wonderful experience. The nine-day festival concludes with Mahanavami, and Vijaya Dasami the next day is just an extension.

Peyazhwar, as the readers would be aware, is the 'Son of the Soil' as Thirumayilai is the place of his Avathara. 'Thamizh-thalaivan', as fondly referred to by Thiruvarangathu Amudhanar, the Azhwar was the one who first revealed the darsan of Sriman Narayana at Thirukkovalur, exclaiming 'Thirukkanden, ponmeni kanden'. A fitting and elaborate 10-day celebration with daily purappadu, thirumanjanam, sevakalam and Satrumurai will culminate on his Thirunakshatram day (Aippasi-Sathayam).

Thirumanjanam for Utsava Murthi of Garudan

The Utsava murthi of Garudan was consecrated during the Maha Samprokshanam in March this year, allowing devotees the opportunity to undertake or sponsor Thirumanjanam to Vainatheya, the epitome of the Vedas. The first Thirumanjanam after consecration was performed on August 17. Plans are on the anvil to have regular such Thirumanjanam; several Ubhayadhars benefited from the event held on October 11 and received the grace of Sri Garudan.

Praying the Divya Dampathis and Swami Desika to bestow their unbounded grace on all the devotees. ❊

Mobile Phone for Devasthanam

We are pleased to inform you that Sri Vedantha Desikar Devasthanam now has a mobile number for the convenience of devotees and Ubhayadhars, in addition to the two Landline numbers. **The mobile number is +91 77086 53799.** Kindly note the same for future communication.

ஸ்ரீ:



பராபவ வருட ஐப்பசி மாத பஞ்சாங்கம்						
ஆங்கில தேதி	தமிழ் தேதி	திதி	வாரம்	நக்ஷத்ரம்	உத்ஸவம்	உபயம்
அக்டோபர் / நவம்பர்	ஐப் பசி					
18.10.2026	1	ஸப்தமி / அஷ்டமி	ஞாயிறு	பூராடம்	துலா விஷு புண்யகாலம். நவராத்ரி உத்ஸவம் 7-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 6-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு, திருமஞ்ஜனம். இரவு ஸேவாகாலம், சாற்றுமுறை	நவராத்ரி: ஸ்ரீ K.S. சேதுராமன் குடும்பத்தினர். பேயாழ்வார் உத்ஸவம்: ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன்
19.10.2026	2	அஷ்டமி / நவமி	திங்கள்	உத்திராடம் / ச்ரவணம்	நவராத்ரி உத்ஸவம் 8-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 7-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு, திருமஞ்ஜனம். இரவு ஸேவாகாலம், சாற்றுமுறை. ஸ்ரீ தேசிகன் 27-ம் நாள் விடாயாற்றி. காலை ஸ்ரீ தேசிகன் உத்ஸவர் திருமஞ்ஜனம். இரவு புஷ்ப பல்லக்கு	நவராத்ரி: ஸ்ரீமதி அலமேலு ராமபத்ரன் & ஸ்ரீ N.R. நரஸிம்ஹன். விடாயாற்றி திருமஞ்ஜனம்: ஸ்ரீ T. ஸ்ரீநிவாஸன் & ஸ்ரீ S. பரத்வாஜ். புஷ்ப பல்லக்கு: 1. ஸ்ரீ P.V. ராகவன் பண்ட், 2. ஸ்ரீ S. ரவிச்சந்திரன்
20.10.2026	3	நவமி / தசமி	செவ்வாய்	ச்ரவணம்	நவராத்ரி உத்ஸவம் 9-ம் நாள். மஹா நவமி. காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 8-ம் நாள். காலை பேயாழ்வார், தேசிகன் வீதிபுறப்பாடு, திருமஞ்ஜனம். இரவு ஸேவாகாலம், சாற்றுமுறை	நவராத்ரி: ஸ்ரீ S. நாராயணன் குடும்பத்தினர் & ஸ்ரீ T. நாராயணன் குடும்பத்தினர். ச்ரவணம்: ஸ்ரீ N.R. கோவிந்தராஜன்
21.10.2026	4	தசமி / ஏகாதசி	புதன்	அவிட்டம்	பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், ஆழ்வார் வீதிபுறப்பாடு. திருமஞ்ஜனம், ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை. விஜயதசமி. மாலை பெருமாள் குதிரை வாஹனத்தில் எழுந்தருளி அம்பு போடுதல். பேயாழ்வார் உத்ஸவம் 8-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு, திருமஞ்ஜனம். இரவு ஸேவாகாலம், சாற்றுமுறை	விஜயதசமி: ஸ்ரீ A.R. ஸந்தான க்ருஷ்ணன் & ஸ்ரீ A.K. முத்துஸ்வாமி. பூதத்தாழ்வார்: ஸ்ரீ S.T. நரஸிம்ஹா சார்யர் குடும்பத்தினர்
22.10.2026	5	ஏகாதசி	வியாழன்	சதயம்	பேயாழ்வார் திருநக்ஷத்ரம். காலை மங்களாசாஸனம், வீதிபுறப்பாடு. பெருமாள், தாயார், ஆழ்வார் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், தாயார், பேயாழ்வார் உள்புறப்பாடு, பத்தி உலாத்தல். பின்பு பெருமாள், பேயாழ்வார் வீதிபுறப்பாடு, ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை	
23.10.2026	6	த்வாதசி	வெள்ளி	பூரட்டாதி	பேயாழ்வார் கந்தபொடி உத்ஸவம். தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் உள்புறப்பாடு	பேயாழ்வார் உத்ஸவம் 10 நாட்களும் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன். தாயார் உத்ஸவம்: ஸ்ரீ அழிசூர் வீரராகவன் குடும்பத்தினர் & ஸ்ரீ A.V. ராமன்



24.10.2026	7	த்ரயோதசி	சனி	உத்திரட்டாதி	திருமால்வடை	
25.10.2026	8	சதுர்தசி	ஞாயிறு	ரேவதி	திருமால்வடை	
26.10.2026	9	பௌர்ணமி	திங்கள்	அச்வினி	பஞ்சபர்வம். காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு	ஸ்ரீ பாலாஜி ராஜகோபாலன்
27.10.2026	10	ப்ரதமை / த்வீதியை	செவ்வாய்	பரணி	திருமால்வடை	
28.10.2026	11	த்விதீயை / த்ருதீயை	புதன்	க்ருத்திகை	திருமங்கையாழ்வார்	
29.10.2026	12	சதுர்த்தி	வியாழன்	ரோஹிணி	கண்ணன், திருப்பாண் ஆழ்வார் ஆஸ்தானம்	
30.10.2026	13	பஞ்சமி	வெள்ளி	ம்ருகசீர்ஷம்	காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். தாயார் உள்புறப்பாடு	ஸ்ரீ S.T. நரஸிம்ஹா சார்யர் குடும்பத்தினர்
31.10.2026	14	ஷஷ்டி	சனி	திருவாதிரை	ஸ்ரீ ராமாநுஜர்	
1.11.2026	15	ஸப்தமி	ஞாயிறு	புனர்வஸு / புஷ்யம்	ஸ்ரீ ராமர் திருமஞ்ஜனம். ராமர், குலசேகராழ்வார் ஆஸ்தானம்	V.D.R. பண்ட்
2.11.2026	16	அஷ்டமி	திங்கள்	புஷ்யம் / ஆயில்யம்	திருமால்வடை	
3.11.2026	17	நவமி	செவ்வாய்	ஆயில்யம் / மகம்	திருமால்வடை	
4.11.2026	18	தசமி	புதன்	மகம் / பூரம்	திருமழிசைப்பிரான்	
5.11.2026	19	ஏகாதசி	வியாழன்	பூரம் / உத்திரம்	பஞ்சபர்வம். காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு	ஸ்ரீ ராஜகோபாலன்
6.11.2026	20	த்வாதசி	வெள்ளி	ஹஸ்தம்	காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். தாயார் உள்புறப்பாடு	A.G. ருக்மணி அம்மாள் பண்ட்
7.11.2026	21	த்ரயோதசி	சனி	ஹஸ்தம் / சித்திரை	பஞ்சபர்வம். காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு. மாலை எண்ணெய் குடம் வீதிபுறப்பாடு	ஸ்ரீ ஸ்ரீராமன் குடும்பத்தினர் - ஸ்ரீ K.S.N. குடும்பத்தினர்
8.11.2026	22	சதுர்தசி	ஞாயிறு	சித்திரை / ஸ்வாதி	தீபாவளி பண்டிகை. காலை பெருமாள், தேசிகன் திருமஞ்ஜனம் மாலை பொழுதுடன் திருவாராதனம். வீதிபுறப்பாடு	ஸ்ரீ R. வாஸுதேவன் குடும்பத்தினர்
9.11.2026	23	அமாவாசை	திங்கள்	ஸ்வாதி / விசாகம்	பஞ்சபர்வம். காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு	ஸ்ரீ T.E. தேசிகாசாரி குடும்பத்தினர்
10.11.2026	24	ப்ரதமை	செவ்வாய்	விசாகம் / அநுஷம்	அன்னகூட உத்ஸவம். திருமஞ்ஜனம், ஆஸ்தானம்	ஸ்ரீ S. கோபாலக்ருஷ்ணன்
11.11.2026	25	த்விதீயை	புதன்	அநுஷம்	நாதமுனிகள்	
12.11.2026	26	த்ருதீயை	வியாழன்	கேட்டை	தொண்டரடிப்பொடியாழ்வார்	
13.11.2026	27	சதுர்த்தி	வெள்ளி	மூலம்	காலை பெருமாள், தாயார் மூலவர், தாகூட்டியார் உத்ஸவர் திருமஞ்ஜனம். தாயார் உள்புறப்பாடு	மாங்குடி ஸ்ரீ P. ரங்கராஜன்



14.11.2026	28	பஞ்சமி	சனி	பூராடம்	ஸேனைநாதன் திருநக்ஷத்ரம். பெருமாள், ஸேனைநாதன் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீமதி ஷோபனா ராமரத்னம்
15.11.2026	29	ஷஷ்டி	ஞாயிறு	உத்திராடம்	கலியன் உத்ஸவம் 1-ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	கலியன் உத்ஸவம் 10 நாட்களும் ஸ்ரீ C.S. பார்த்தஸாரதி
16.11.2026	30	ஸப்தமி	திங்கள்	ச்ரவணம்	பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம். பெருமாள், ஆழ்வார், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. கலியன் உத்ஸவம் 2-ம் நாள்	ஸ்ரீ T.R. தேவநாதாசார்யர்

அருளிச்செயல் அருஞ்சொற்பொருள் அகராதி 2

அஞ்சுருவாணி: தேரின் அச்சாணி.

அட்டாலை: மேல்தளம்.

அடிக்கழஞ்சு: விலையுயர்ந்தது. கழஞ்சு கழற்கோடிக்காய், ஒரு அடி நிலம் ஒரு கழற்கோடித் தங்கமத்தனை விலையாகும் என்று பொருள். கழஞ்சி என்று கோயிலில் பூசைக்காக பச்சைக் கற்பூரம் கலந்து வைக்கும் சந்தனத்திற்கும் பெயர்.

அடிக்குடில்: அடிமைப்பட்ட குடும்பம்.

அடிக்கோலுதல்: ஆரம்பித்தல்.

அடிமை: கைங்கர்யம்.

அடிமைக்குற்றேவல்: தொழிலுக்கு உண்டான, குற்றேவல்.

சிறு தொழில்: அந்தரங்கமான செயல்.

அடுகு வளம் - சாப்பாட்டுப் பெட்டி, அதாவது அடுக்குப் பெட்டி மேல் பெட்டியாய், சாப்பாடு கொண்டு வரும் அடுக்கு.

அடுசோறு: சமைக்கும் சோறு.

அடைக்காய்: அடை- வெற்றிலை, காய் - பாக்கு.

அடைப்புண்ணும்: உள்ளடங்கும்.

அடையவளைந்தான்: சுற்றிலும் வளைத்திருப்பது; திருவரங்கம் கோயிலின் எட்டாவது மதிளுக்கு அடைய வளைந்தான் என்று பெயர். திருவரங்க மாநகரை முழுவதும் சூழ்ந்து கொண்டிருப்பதனால் அம்மதிளுக்கு அடையவளைந்தான் என்று பெயர் உண்டாயிற்று. திருவாய்மொழி ஈட்டுரைக்கு அமைந்த பெரிய அரும்பத விளக்கத்துக்கு அடையவளைந்தான் அரும்பதம் என்று பெயர். ஈட்டுரையை முழுதும் சூழ்ந்து கொண்டு விளக்குவதனால் அடையவளைந்தான் எனப்பட்டது என்பர் பெரியோர்.

அடையார் சீயம்: பகைவர்களுக்கு சிங்கம் போல் அணுக முடியாதவன்

அடைவு: தகுதி, ஸம்பந்தம், ப்ராப்தி.

அடைவுகெட: முறைகெட.

அணுக்கன் வாசல்: கருப்பக்ரஹத்துக்கு ஸமீபத்தில் உள்ள வாசல் திருவணுக்கன்வாசல். ஸ்ரீரங்கம் ஸந்நிதி வாசல்; ஜய விஜயர்களான த்வாரபாலகர்களுக்கு அருகில் மணிக் கதவுள்ள வாசல். அணுக்கன் குடை என்ற பெயரிலும் இந்த வாசலுக்கு இப்பெயர் பொருந்தும். பெருமாள் வெளியே புறப்படும் போது இந்த வாசலிலிருந்தும், உள்ளே எழுந்தருளும் போது இந்த வாசல் வரையும் குடை பிடிக்கப்படும்.

அத்தலைப்பட்டு: அங்கே போய்.

அத்தவாளம்: உத்தரீயம், மேலாக்கு.

அத்தாணிச் சேவகம்: பிரியாத ஸேவை; பெருமாளுக்கு அருகிலிருந்து செய்யும் ஸேவை.

அத்திக்காயில் அறுமான்: பூச்சி; அத்திப்பழத்தில் புழு, பூச்சி நிறைந்திருப்பது.

அத்தியூரான்: அத்திகிரியான காஞ்சியில் உள்ள வரதராஜப் பெருமாள்.

அத்தைப்பற்ற: அதைக் காட்டிலும்.

அத்தோட்டை: அதனோடு ஒத்த.

அதாகிறது: அதாவது.

அதுவன்றியும்: அதுக்குமேலே.

அந்தகாலம்: முடிவுகாலம்.

அந்தணர் கற்பு: பிராமணர்களாலே அத்யயநம் பண்ணப்படுகிற, கற்பு கல்வியாய், ப்ரஹ்ம வித்யை.

அந்தணர் மாடு: வேதம்.

அந்தணர் மாட்டந்தி: வேதாந்தம்.

அப்பூச்சி காட்டல்: கண்ணை இறுக்கிக் கொள்ளுதல்; சங்கு சக்ரங்களைக் காட்டல்.

அப்பாவி: கபடமில்லாதவன்

அம்மான் பொடி: 'அம்மான் அம்மான்' என்று சொல்லி பின்தொடரும் படியான சுக்குப்பொடி. கள்வர்கள் சிறுவர்களைத் தன்வயப்படுத்த 'அம்மான்' என்று சொல்லி ஒரு பொடியைத் தூவினால் அவர்கள் 'அம்மான் அம்மான்' என்று சொல்லிக் கொண்டே கள்வர்களைத் தொடர்வர்.

(தொடரும்...)

ஸ்ரீ:



இரு வரங்கள்

ஸ்ரீ திருமலை நல்லான் சக்ரவர்த்தி இராமகிருஷ்ணையங்கார், வைகுண்டவாஸீ

இராமாயணம் அரும்பெருங் காவியம், மிக்க புகழ் வாய்ந்தது; பக்தி வெள்ளமாகப் போற்றப்படுவது, பக்திக்கு உரிய பெருமை வாய்ந்தவனாக அது இராமபிரானைச் சித்திரித்துக் காட்டுகிறது.

பெருமைக்குக் காரணம்

இராமபிரானது பெருமை இராமாயணத்திலே இரண்டு வரங்களாலே விளங்குகிறது. இராமாயணமென்னும் பக்தி வெள்ளத்துக்கு ஊற்றுவாயே இரண்டு வரங்கள் தாம். அவையாவன உலகம் எல்லாம் பரதனே ஆளவும், ஏழிரண்டு ஆண்டுகள் இராமன் கானகம் நண்ணவும் தயரதனிடம் கைகேயி கேட்டவை. இவ்விரு வரங்களே தயரதன் குடும்பத்தைக் குலைத்து உலகையே குலுக்கி முடிவில் மறத்தை விலக்கி அறத்தை நிலைக்கச் செய்தன. இறைவன் இராமனாய் வந்ததைப் பயனுறச் செய்தவை இவ்விருவரங்களே. இராமபிரானது புகழ்க்கொடி படர்ந்து வளருவதற்கு முதற் கிழங்காய் அமைந்தன இவ்வரங்கள்.

தெய்வச் செயல்

இராமபிரானது வாழ்க்கையைத் திருப்பிக் காட்டிலே புகவிட்டதாயமைந்த இவ்வரங்கேட்கும் நிகழ்ச்சி, தெய்வச் செயலால் நிகழ்ந்த ஒன்றே. கைகேயியின் இயல்பினுக்கு இது சிறிதுமொவ்வாதது. இராமபிரானிடம் மாசற்ற பாசம் கொண்டவள் கைகேயி, இராமனிடத்தும் பரதனிடத்தும் வேற்றுமையை நான் காணவில்லை என்கிறாள் அவள். அச்சுறுத்திப் பேசும் கூனியின் கொடுஞ் சொல்லைக் கேட்கும் போதும் 'இராமனைப் பயந்த எற்குஇடருண்டோ?' என்றுவினவும்கைகேயியினிடம் இராமன் பாலுள்ள பெற்ற பாசத்தை நாம் நன்கு காண முடிகிறது. இத்தகைய தாய்மை நிறைந்த அவளது கள்ளம் கபடமற்ற உள்ளம் மாறுபாடுறுவதற்குக் காரணம் தெய்வச்செயலன்றி வேறு யாதாக இருக்க முடியும்? அடிமைப் பெண்ணாகிய மந்தரையின் மாற்றம் இம்மனமாற்றத்துக்குக் காரணமென்பது இயலாது. அரசாங்கத்திலேயே விரிசலை உண்டு பண்ணுமாற்றல் ஓரடிமைப் பெண்ணுக்கு அமைவது எங்ஙனம்?

உண்டையுண்டது

இனி, இராமபிரான் இளமையில் உண்டை கொண்டு தன் கூனில் அடித்ததை மறவாது கறுவுகொண்டு மந்தரை, முடிசூட ஒட்டாது தடுத்து நிறுத்த மிக்க சீற்றம்கொண்டு கைகேயியிடம் சென்றதாகக் கவிஞர் பெருமான் கம்பன்,

தொண்டை வாய்க்கோயன் தோகை கோயின்மேல்
மண்டினாள் வெகுளியின் மடித்தவாயினாள்
பண்டைநாள் இராகவன் பாணி வில்லுமிழ்
உண்டையுண்டதனைத் தன்னுள்ளத்து உள்ளுவாள்.

என்று வருணித்திருப்பது கோபம் வரக் காரணமொன்றைக் காட்டுமேயன்றி அவளுக்குத் தடுத்து நிறுத்துமாற்றல் அமைத்திருப்பதற்கு ஆதாரமாகாதென்க.

உதையுண்டது

இங்ஙனமே காஷ்மீர தேசக் கவிஞன் க்ஷேமேந்திரன் தனது ராமாயண மஞ்சரியில் இராமன் திருவடியில் முன்பு உதைபட்டதை மறவாது நினைத்து மந்தரை கோபங்கொண்டதாக வருணித்திருப்பதும் இங்கு அறியத் தக்கது.

வால்மீகத்தில் முடிசூடும் செய்தியைக் கேள்விப்பட்டதும் உடனே சினம்மூண்டு கூனி கைகேயியை அடைந்து பேசலுற்றாள் என்று கூறப்பட்டுள்ளது. சீனம் மூளுவதற்குக் காரணம் காட்டப்படவில்லை, வியாக்கியானங்களிலும் விளக்கப்படவில்லை.

சினத்திற்கு ஏது


முடிசூடுவதைத்தடுத்து நிறுத்துமளவிற்குச்சினம்மூள வேண்டுமானால் அதற்கு ஏதோ ஒரு காரணமிருந்தாக வேண்டும். வால்மீகி அக்காரணமின்னதென்று வெளிப்படுத்தவில்லை. பண்டைத் தமிழர் மந்தரையின் கூனில் உண்டை கொண்டு இராமனடித்ததைக் காரணமாகக் கண்டனர். **கூனிகூன் உண்டை கொண்டரங்க வோட்டி உள்மகிழ்ந்த நாதன்** என்று திருமழிசைப்பிரான் திருச்சந்தவிருத்தத்தில் அருளியுள்ளமை காண்க. அதனையடியொற்றிக் கம்பன் தனது இராமாயணத்தில் அக்காரணத்தையே காட்டினான்.

இராமாயணம் உலகமெங்கும் பிரசாரத்திலுள்ளதொரு சிறந்த நூல், காஷ்மீரிகள் மந்தரையின் சினத்துக்குக் கண்ட காரணம் வேறுபட்டதாயுள்ளது. இராமன் திருவடியால் உதைபட்டதையே கூனியின் கொடுஞ் சினத்துக்குக் காரணமாகக் கண்டனர் அவர்கள். க்ஷேமேந்திரன் அதனைத் தனது நூலில் காரணமாகக் காட்டினான்.

எக்காரணம் கொண்டு சினம் மூண்டாலும் தொழுத்தையான கூனிக்கு முடிசூடுதலைத் தவிர்த்து இராமனைக் காட்டுக்கு அனுப்பத் தக்கவல்லமை யில்லை என்பது ஒருதலை.

மாமனத்தின் கலக்கம்

இராமனைத் தான் பயந்ததாகக் கருதுகிறாள் கைகேயி. வளர்க்கவும் செய்கிறான். இதனை **தாய் கையில் வளர்த்திலன் வளர்த்தது தவத்தால் கேகயன் மடந்தை கிளர் ஞாலம் இவனாள** என்று உலகமுமறித்து பேசுகிறது. இராமனும் இவளிடம் தாய்ப்பசுவைக் காணும் கன்று போன்றுள்ளான். இங்கனிருக்க அடியாட்டியொருத்தி சொன்னபடி நடக்கும் கொடுமைக்காரியாகக் கைகேயியைக் கருதுவது தகாது. அவளது மனம் மிகப் பெரியது. அத்தகைய மனமும் கடல் கலங்குவதுபோல் கலங்கியது. கடல் கலங்குமா? அது கண்ணனால் மந்தரத்தைக் கொண்டு கலக்கப்பட்டது. அது போலக் கடல் போன்ற மாமனமும் தைவத்தால் மந்தரையைக் கொண்டு கலக்கப் பட்டுவிட்டது. **கலக்கிய மாமனத்தனளாய்க் கைகேசிவரம் வேண்டினாள்** என்க. தெய்வச் செயலால் நேர்ந்த கலக்கம் தசரதனுக்குப் புலப்படலில்லை. அதனால் அவனுடைய பெரிய மனமும் மலங்குவதாயிற்று. மன்னவனும் மலக்கிய மாமனத்தினனானான். 'இராவணவதம் செய்த பிறகு இராமனைக் காணத் தயரதன் தேவ உருவில் விண்ணினின்றும் வந்த பிறகுதான் அவனுக்கு இவ்வுண்மை புலனாயிற்று. அவளே இப்பொழுதுதான் இராவண வதத்திற்காகத் தேவ இனத்தின் தலைவர்கள் பட்டாபிஷேகத்துக்குத்



தடையேற்படுத்தியது எனக்குத் தெரிகிறது' என்று இராமனை புருஷோத்தமா என விளித்துக் கூறியதாக வால்மீகி ராமாயணத்திற் காணப்படுகிறது.

இதாநீம்து விஜாநாமியதா ஸௌம்ய ஸுரேச்வரை: ।
வாதார்த்தம் ராவணஸ்யேதம் விஹிதம் புருஷோத்தம! ।।
(யுத்த. கா. 122-187).

தேவ ரகசியம்

தேவர்களின் தலைவர்கள் கூடி இராமன் முடி சூடற்கு இடையூறு விளைவித்தனரென்பதை முதலிற் கூறாது நம்மையும் தயரதனையும் மலங்கவடித்து, முடிவில் இவ்வுண்மையைத் தயரதன் வாயிலாகவே வெளிப்படுத்துகிறார் வால்மீகி முனிவர். தேவரகசியத்தை நிகழ்ச்சி நடக்கும் போதே வெளியிடாது முடிவிலும் தன்வாயினாலன்றித் தயரதன் வாயிலாகவே வெளியிடும் கவிவாணர் வால்மீகி முனிவரது திறமையும் உள்ளடக்கமும் உள்ளியுள்ளி ரசிக்கத்தக்கனவாயுள்ளன.

அத்யாத்ம ராமாயணம், தயரதன் இராமபிரானுக்கு முடிசூட்ட முயலும்போது தேவர்கள் மலைமகளிடம் மண்ணுலகில் அயோத்தி எய்தி மந்தரைமீதும் பின்னர்க் கைகேயி மீதும் ஆவேசித்து முடிசூட்டைத் தடைப்படுத்தி விண்ணகம் மீண்டருள வேண்டும் என்று வேண்டித் தூண்டியதாக இத்தேவரகசியத்தை விளக்குகிறது. அதனையடியொற்றித் துளசி தாஸர் தமது ராமாயணத்தில் அழகுபட வருணித்திருக்கிறார்.

நம் கவிஞர் பெருமான் கம்பனோ, முடிவிலும் இத்தேவரகசியத்தைத் தெளிவாக வெளியிடாது, மூடிமறைத்து வைக்கும் அழகு வியப்புக்குரியது. தேவ உருவில் வந்த நிலையிலும் இவ்வுண்மையைக் காணாமையால் கைகேயியினாற்பட்ட மனப்புண் ஆறாது நிற்கும் தயரதன் உள்வெதுப்புத் தீரத் தேவதேவனான இராமபிரானே இந்தத்தேவரகசியத்தை உய்த்துணரும் வண்ணம் தந்தையிடம் வெளிப் படுத்தியதாகக் கதையையமைத்த கவிஞனது கற்பனைத் திறனை என்னென்பது!

மந்தரையின் உண்மை நிலை

மந்தரை என்னும் பெயர் வாய்ந்த அப்ஸரஸ் ஒருத்தி, தேவர்களால் தங்கள் பணியான இராவணவதத்திற்காக ஒரு பணியாட்டியாக அனுப்பப்பட்டுக் கேகய அரானால் கைகேயிக்குச் சீதன வெள்ளாட்டியாகக் கொடுக்கப்பட்டாள். இது பாத்ம புராணததில் கண்டது. இதனை ஏற்புடையதாகச் சான்றோர்கள் கொள்கின்றனர். வால்மீகி முனிவருக்கும் இதுவே உடன்பாடு.

தேவமாது ஒருத்தி கூனி வடிவத்தில் வந்துள்ளமையால் அவளது பிறப்பு வளர்ப்பு யாதொன்றும் தெரியாதென்று

மூடுமந்திரமாகப் பேசுகிறார் அடக்கம் வாய்ந்த வால்மீகி முனிவர். 'யதோ ஜாதா' எங்கோ பிறந்தவளென்கிறார் அவர் மந்தரையை. இதனால் வால்மீகி முனிவர் வேண்டுமென்றே இந்தத் தேவரகசியத்தை மறைத்து வைத்திருப்பது நமக்குத் தெரிகிறதன்றோ?

யோக க்ஷேமம்

சரணடைந்த தேவர்கட்காக இராவணனை வதம் செய்ய எம்பெருமான் இராமனாய் வந்தானென்பது வெளிப்பேச்சு; ஆன்ம வர்க்கத்திற்கு இயல்பான பாரதந்திரியத்தை வெளிப்படுத்துவதே உள்நோக்கம். ஆதலின் தந்தை சொற்படி நடக்கவேண்டிய தனது பாரதந்திரிய நிலைக்கு ஏற்ப இராவணவதத்துக்காக வந்திருப்பினும் அரசாட்சியை ஏற்று நடத்த முற்பட்டான் எம்பிரான், ஆயின் தேவர்களின் பயனான இராவணவதம் எங்கனம் கைகூடும்? அது கை கூடுவதற்காகத் தேவர்களால் அனுப்பப்பட்ட மந்தரை முடிசூடலைத் தவிர்க்கப் பரதனுக்கு முடிசூட்ட வேண்டும் என்று வரம் கோரும்படி செய்தாள். முடிசூடல் தவிர்ந்தாலும் அயோத்தியைவிட்டு இராமபிரான் வெளியேறாதிருப்பின் இராவண வதத்திற்கு வழி ஏற்படாது. வேறு நாட்டுக்கு வெளியேறினாலும் பயனில்லை. கானகத்தில் திரியும் அரக்கருடன் மோதலேற்படுவதற்காகக் கானகம் ஏகியாக வேண்டும். அதற்காக இராமபிரானைக் காட்டுக்கு அனுப்புமாறு இரண்டாவது வரமும் கேட்கும்படி செய்து விடுகிறாள் மந்தரை.

பரதனுக்கு அரசு கிடைப்பது யோகமாகவும், இராமபிரான் கானகம் செல்வது க்ஷேமமாகவும் கைகேயிக்கு அமைகின்றன. புதிதாய்க் கிடைப்பது யோகமென்றும், கிடைந்ததைப் பாதுகாப்பது க்ஷேமம் என்னும் சொல்லப்படும்.

முரண்படும் அறங்கள்

சரணடைந்த தேவர்களிடம் இராவண வதம் செய்வதாக வாக்குறுதியளித்து வந்து அவதரித்திருக்கிறன் எம்பெருமான். தந்தையிட்ட கட்டளையின் படி அவனே அரசாட்சியை ஏற்க இசைகிறான். சரண் அடைந்தோர் துயர் தீர்த்தன்றித் தன்பணியில் நாட்டம் செலுத்தாதவன், இன்று அடியாரல்லல் தவிர்க்காது தான் நாடாள இசைகிறான். வாக்குறுதியை முதலிற் காப்பாற்ற வேண்டுமானால் அரசாள இசையக் கூடாது. அரசாட்சியை ஏற்றபின் வாக்குறுதி காற்றில் பறந்து போகும். என்ன செய்வது? வாக்குறுதியை விடத் தந்தை சொற்படி நடப்பதே சிறந்ததென்று முடிவுக்கு வந்தான் இராமபிரான். தன் சொல்லைவிடத் தந்தையின் சொல்லிற்கு மதிப்பளிக்கிறான் அவன்.

இரண்டு அறங்களுக்குள் முரண்பாடு இல்லாத போது இரண்டையும் புரிதல் வேண்டும்.



முரண்படும்போது பொது அறத்தை விட்டுச் சிறப்பு அறத்தைக் கைக்கொள்ளல் வேண்டும். இங்குச் சொல்தவறாமைக்கும். பிறர் சொற்படிநடக்க வேண்டிய நிலையான பாரதத்திரியத்துக்கும் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. சொல் தவறாமை பொது அறம். பாரதந்திரியம் சிறப்பு அறம். முன்னது உடலெடுத்தவர் ஏற்பது, பின்னதோ தேசத்தின் தொடர்பின்றி நிற்கும் ஆன்ம ஸ்வரூபத்தில் தன்மை. முன்னதை விசிஷ்ட தர்மம் என்றும் பின்னதை நிஷ்க்ருஷ்ட தர்மம் என்றும் பகர்வர் பெரியோர். நிஷ்க்ருஷ்டமான பாரதந்திரியத்தை எவ்வகையானும் காக்க வேண்டும் என்பதைப் புகட்டுவதையே உள்நோக்கமாகக் கொண்டு அவதரித்தவனாதலின் ஆதர்ச புருஷனாகிய இராமன் பரதந்திரனாய், அரசாள உடன்பட்டனனென்க. அரசகுமரனாகிய தனக்கும் பாராளுவது கடமை என்று நினைத்து அவன் உடன்படவில்லை. அங்கனம் நினைத்தால் அது சிறப்பு அறமாகாது. தன்னைப் பரதந்திரனென்று உணரும் போதே சிறப்பு அறமாகிவிடுகிறது. இக்கருத்தினையே கவிச்சக்கரவர்த்தி கம்பன்,

தாதையைப் பரிசுரைப்பத் தாமரைக் கண்ணன்
காதலுற்றிலனிகழ்ந்திலன் கடனிதென்றுணர்ந்தும்
யாது கொற்றவனேவியது அது செயலன்றோ
நீதியெற்கென நினைத்து தன் பணி தலைநின்றான்.

என்று உணர்த்துலதுவது கவனத்திற்கு உரியது.

அரசாளுவது அரசர்க்கு மூத்த மகனாய்த் பிறந்த தனக்குக் கடமை என்பதை உணர்திருந்தும்,

அக்காரணம் கொண்டு பாராளத் தலைப்படவில்லை. அரசனான தந்தையின் ஆணைப்படி நடத்தல் வேண்டுமென்றும் அக்காரணம் கொண்டே பாராளத் தலைப்பட்டான் என்பதைக் கவனிக்க.

முரண்பாட்டு நீக்கம்

பொது அறமும் சிறப்பு அறமும் முரண்படும் போது நாம் நடந்து கொள்ள வேண்டிய முறையைப் பாராள இசைவதன் மூலமுணர்த்திய இராமபிரான், முடிவில் முரண்பாட்டைத் தவிர்த்துத் தனது குறிக்கோளாகிய பாரதந்திரியத்தை உறுதிப்படுத்துவது எண்ணி எண்ணி வியந்து இன்புறத்தக்கதாயுள்ளது. தேவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதி வீணாகாதவாறு அத்தேவர்களைக் கொண்டே முடிசூடற்குத் தடை விளையச் செய்து, பாராளச் சொன்ன தந்தையே கானகமேகும்படி ஏவும் சூழ்நிலையை உருவாக்கி, எம்பெருமான் தனது பாரதந்திரியத்தை உறுதிப்படுத்திக் கொண்ட வித்தகம் வியந்து போற்றத் தக்கதன்றோ! பாராள உடன்பட்டதும் தந்தை பணியே; கானகமேகியதும் தந்தை பணியே என்பதைக் காண்க.

வால்மீகி முனிவர்,

ஸஜகாம வநம்வீர: ப்ரதிஜ்ஞாமது பாலயந் ।
பிதுர்வசத நிர்தேசாத் கைகேய்யா ப்ரியகாரணாத் ॥

என்று தந்தையின் ஆணையை நிறைவேற்று வதற்காகவும், கைகேயியின் பிரீதிக்காகவும் தன் வாக்குறுதியை நிலைநிறுத்துமவனாய் வீரனான இராமபிரான் கானகம் சென்றதாகச் சொல்லியிருப்பதும் கவனித்தற்கு உரியது. சரணடைந்த தேவர்களின் காரியம் நிறைவேறுவதாயிருப்பினும் தந்தையின் உத்தரவே காட்டிற்குப் புறப்படக் காரணமென்று இராகவன் கருதினானென்க.

காளிதாஸன், அரசாளச் சொன்னபோது இராமபிரான் அழுதுகொண்டே இசைந்ததாகவும், காட்டிற்குச் செல்லும்படி கட்டளையிட்ட போது மகிழ்ச்சியுடன தனை ஏற்றுக் கொண்டதாகவும் கூறியுள்ளான் (ரகுவம்சம் 13.77).

அழுவதற்குக் காரணம் தேவர்களுக்குத் தான் கொடுத்த வாக்குறுதி நிறைவேறாமையால் அவர்களுடைய அல்லலை முதலில் தீர்க்காமலிருப்பது. மகிழ்வதற்குக் காரணம் அவ்வாக்குறுதி நிறைவேறும் வாய்ப்புக் கிடைத்தமையால் அவ்வல்லலை முதலில் தீர்ப்பது என்பது காளிதாஸன் கருத்து.

மல்லிநாதர் என்னும் உரையாசிரியரோ வேறு விதமாகக் கருத்து உரைக்கிறார். அழுவதற்குக் காரணம் தந்தை தவம் செய்யத் தன்னை விட்டுப் போய்விடுவாரே என்கிற வருத்தமென்றும், மகிழ்ச்சிக்குக் காரணம் தந்தை சொற்படி நடக்கும் பேறு தனக்குக் கிடைத்தமை என்றும் கருத்தை விளக்குகிறார் அவ்வுரையாசிரியர்.

தந்தை சொற்படி நடக்கும் பேறு பாராளும்போது வாய்க்காதா? காட்டிற்குப் போகும்போது தந்தையைவிட்டுப் பிரியும் வருத்தம் நேராதா? என்பதை அறிஞர்கள் கண்டு அவ்வுரையின் ஏற்புடைமைக்கு முடிவு செய்க.

கைகேயியின் நன்றி

அவளைப் பிடிக்கவில்லை, வெறுக்கிறேன். இங்கனம் கைகேயி கேட்ட இருவரங்கள் தேவரகசியமாயமைந்து தயரதன் முதலியோர்களால் அறியப்படாது கைகேயிக்குப் பேரிழுக்கையும், இராமபிரானுக்கு ஈடற்ற ஏற்றத்தையும் தந்துள்ளன. தன் மாங்கல்யத்தை இழக்கும் அபாயத்தையும் அறியாத ஸாஹஸக்காரியாகத் தோன்றுகிறாள் கைகேயி. தன் மகனது நலமே பேணும் தன்னலக்காரியாகி விட்டாள் அவள். கொண்ட கணவனுக்கே அவளைப் பிடிக்கவில்லை; வெறுக்கிறான். **உன் கழுத்தின் நாண் நின்மகற்குக் காப்பின் நாண் ஆகுக** என்று தன் ஆத்திரத்தைக் கொட்டுகின்றான் தயரதன். 'நின் மகன்' என்கிறான் பாதனை, தன் மகனன்மை தோன்ற. கைகேயி வயிற்றில் பிறந்த குற்றத்திற்காகப் பாதனோடும் தன் தொடர்பையறுத்துக் கொள்கிறான். தாயின்மீது வந்த சீற்றம் மகன்மீதும் ஏறிப் பாய்கிறது! **இவளென் தாரமல்லள் துறந்தேன், மன்னேயாவான் வருமப் பரதன் தனையுமகனென்றுன்னேன்** என்று கைகேயியோடு அவள் மகனையும் துறப்பதாக வெளிப்படையாகவும் கூறுகிறான் தயரதன்.

இந்தகைய இழிநிலையைத் தானெய்தி அவதாரத்தின் பயனை எய்த இயலாது நிற்கும் இராமபிரானை இரு வரங்களால் ஸத்ய ஸந்தனாக்கி அவதாரத்தின் பயனை எய்தும் வண்ணம் உயர்த்திய கைகேயி நன்றிக்குரியவளன்றோ! ❊

Matrimonial Column

Desika Sandesam has introduced a special Matrimonial Column in the magazine as a **free service** to our society. Interested parents may share the details of prospective brides and bridegrooms. Parents who wish to participate may kindly furnish the details at the temple office in advance so that they can be included in the upcoming issue.

- Trustees

ஸ்ரீ:

அரி(ய) ஆஸனங்கள்

Dr. ஸ்ரீமதி ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு

பூஜ்ய பூஜாத் விதிக்ரம: என்பது ஒரு வசனம். யார் யாரை எப்படியெப்படி கௌரவிக்கவேண்டுமோ அப்படியப்படி கௌரவிக்கவேண்டும். அங்ஙனம் செய்யாவிடில் அதுவே பெரிய குற்றமாகிவிடும் என்பது நியதி. முறை தவறாமை என்பதை ஸ்ரீஆண்டாள் திருப்பாவையில் அழகாகக் காட்டித்தருகிறாள்.

ஆண்டாள் அளித்த சிங்காஸனம்

ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை தனியனில் சொல்லப்பட்ட அத்யாபயந்தீ என்னும் சொல்லுக்கேற்ப பலருக்கும் பல நியதிகளை இப்ரபந்தம் மூலமாகக் கற்றுக் கொடுக்கிறாள். உறங்கிக் கொண்டிருக்கும் எம்பெருமானை எழுப்புவதும் உறங்கும் மற்றவர்களை எழுப்புவதும் க்ரமப்படி நடக்கிறது. துயிலெழுந்த கண்ணன் அழகாக, கம்பீரமாக, தான் சொன்னபடி நடந்துவருவதைக் கண்டு ரஸித்தவள் மங்களாசாஸனம் செய்யுமுன்பு மறக்காமல் அவனுக்கு அமர்வதற்கு ஆஸனம் தருகிறாள். இவ்விதம் அரசர்கள் அரசவைக்கு வந்து ஆஸனத்தில் அமர்ந்த பின்னரே வந்தி வைதாளிகர்கள் அவனைப் போற்றுவதும், தமக்கு ஏதேனும் தேவையுண்டானால் அதை பின்னர் விண்ணப்பிப்பதும் முறையான செயலாகும். இதை ஆண்டாள் செவ்வனே செய்வதை இந்நூலில் நாம் காண்கிறோம். சீரிய சிங்கத்திற்கேற்ப சீரிய சிங்காஸனம் இடுகிறாள். வனவரசனுக்கு மான் தோலில் ஆஸனம் இடுவது பொருந்துமோ? அது தவசீலர்களுக்கே உரியது. சிங்கத்துக்கு ஏற்ற ஒரு சிங்காஸனத்தையிட்டு யாதவ சிங்கத்தை க்ரமப்படி கௌரவித்தது சான்றோர்களின் பேச்சுப்பொருளாகியது. இதுபோல் பலரையும் அவர்களுக்குரிய ஆஸனங்களில் அமரச் செய்து கௌரவித்த பல நிகழ்வுகளை இதிஹாஸ புராணங்களில் நாம் காணலாம்.

சிங்காஸனத்தின் பெருமை

1) படுக்கை வார்த்தையோ, பாதையில் சொல்லும் வார்த்தையோ ஸத்யமாகாது. எனவே சீரிய சிங்காஸனத்திலிருந்து வார்த்தைகள் சொல்லவேண்டும் என்கிறாள் ஆண்டாள்.

2) கடைத்தெருவிலும் கண்டவிடத்திலும் குற்றவாளிக்கு ஒரு நீதிபதி தண்டனை வழங்கிவிட முடியாது. அவர் தம் ஆஸனத்தில் இருந்து கூறும் தீர்ப்பே ஏற்கத்தக்கதாகும்.

3) தர்ம, அதர்ம, ஜ்ஞான, அஜ்ஞான, வைராக்ய, அவைராக்ய, ஐச்வர்ய, அனைச்வர்ய என்னும் எட்டு கால்களை உடைய ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்திருந்தால் பொய் சொல்லமுடியாது என்கிறது சாஸ்த்ரம்.

4) அரசன் அரியாசனத்தில் இருந்து இடும் கட்டளைகளையே மந்திரிகள் ஏற்பர். இது ஆஸனத்தின் சீர்மை.

5) நல்வழியில் செல்பவருக்கு அவருடைய ஆஸனமே நல்ல புத்தியையும் நேர்மையையும் புகட்டும் என்பது உலக வழக்கு. இதற்கு விளக்கமாக விக்ரமாதித்தனின் ஸிம்ஹாஸனம் பல கதைகளைக் கூறும்!

இந்த்ரன் இட்ட ஸிம்ஹாஸனம்

ஒருமுறை சேர சோழ பாண்டியர்கள் மழைவேண்டி இந்த்ரனிடம் சென்றனர். இந்த்ரனின் ஆஸனமும் அருகில் இருந்த இரண்டு ஆஸனங்களும் காலியாக இருந்தன. சேர, சோழ, மன்னர்கள் அவ்விரண்டு ஆஸனங்களில் அமர, தனக்கு ஆஸனமில்லாததால் பாண்டியன் இந்த்ரனின் ஆஸனத்தில் அமர்ந்தான். சற்று நேரத்தில் அவ்விடத்துக்கு வந்த இந்த்ரன் தன் ஆஸனத்தில் அமர்ந்த பாண்டியன் மேல் கோபம் கொண்டு அவனுடைய நாட்டைத் தவிர மற்ற இரு நாடுகளிலும் மழைபொழியும்படி கட்டளையிட்டான். இதனால் தன் நாடு வறட்சியால் வாடுவது கண்டு வருந்திய பாண்டியன் சிவனைக் குறித்து தவம் செய்தான். அதன் பயனாக சிவனிடமிருந்து சக்தி வாய்ந்த அஸ்த்ரங்களைப் பெற்று இந்த்ரனையும் மேகங்களையும் அடக்கினான். மழை தரும் மேகங்களை சிறை வைத்தான். இதனால் கர்வம் நீங்கப்பெற்ற இந்த்ரனும் மன்னிப்புக் கேட்டதுடன் பாண்டிய நாடு எப்பொழுதும் மழையின்றி வாடாது என்று ஸத்யமும் செய்து கொடுத்தான். உரிய கௌரவத்தைக் கொடுக்காத இந்த்ரன் அடைந்த நிலைமை இது!

ராமாயணம் காட்டும் ஸிம்ஹாஸனங்கள்

ஸ்ரீமத் ராமாயணத்தில் சில விசித்ரமான ஆஸனங்களை நம்மால் காணவியலும். ராம சுக்ரீவ நட்பு உண்டாயிற்று. இருவருமே மனைவியை இழந்து நாட்டையையும் இழந்து காட்டில் வாழ்பவர்கள். ஒரே நிலை. ஒத்த நட்பு. லக்ஷ்மணன், ஹனுமான் இவர்களுடன் சேர்ந்து நால்வரும் ஆலோசனை செய்கிறார்கள். உட்கார ஆஸனம் தேவை! சுக்ரீவன் அருகிலிருந்த சாலவ்ருக்ஷத்தின் ஒரு பெரிய

கிளையை முறித்து கீழேபோட்டு அதில் ராமனை அமரச் சொல்லி தானும் அதில் அமர்ந்துகொண்டான். இளைய பெருமாளுக்கு ஆஸனம் இடாததைக் கண்ட ஹனுமான் இது சரியல்ல என உணர்ந்து ஒரு காரியம் செய்தான். அங்கே பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கும் ஒரு சந்தன மரத்தின் கிளையை முறித்துப்போட்டு அவரை அமரச் செய்தான். இதில் ஒரு விசேஷம் உண்டு. ராமனுக்கு மரங்களில் சிறந்ததெனக் கருதப்படும் சாலமரத்தின் கிளை ஆஸனமாயிற்று. ஆனால் அவன் தம்பிக்கு? லக்ஷ்மணன் ஆதி சேஷனின் அவதாரம். பாம்பு தனக்கு இரையேதும் கிடைக்காத காலத்தில் காற்றையே பலநாள் உண்டு வாழக்கூடியது. (வாதாசனவரர்) சந்தன மரத்தைத் தழுவிவரும் காற்று நறுமணத்துடன் கூடியதாய் இருந்தது! ராமனுக்காக ஊண், உறக்கம் என அனைத்தையும் துறந்ததும் (இயல்புக்கேற்ப!) கைங்கர்யத்தில் மட்டுமே முனைந்திருந்த ஆதி சேஷனின் அவதாரமாகிய லக்ஷ்மணனுக்கு அனுமன் உயர்ந்ததான மணமிகு ஆஹாரமும் ஆஸனமும் ஒருங்கே அளித்தான். ஹனுமனின் இச்செயலை போற்றாதார் இல்லை. இந்த ஹனுமனுக்கு ராவணன் தன் தர்பாரில் ஆஸனம் தராதபோது தன் வாலையே ஆஸனமாக்கிகொண்டு அமர்ந்ததையும் நாம் அறிவோம்.

யது வம்சத்துக்கு ஏற்பட்ட சாபத்தால் யாதவ ஸிம்ஹத்துக்கு அரியணை ஏறும் பாக்யம் கிட்டவில்லை! கம்ஸனைக் கொன்ற பின்னும் அதில் ஏறியமர்ந்து ஆண்டவர் உக்ரஸேனர்தானே! ஆனால் இக்ஷ்வாகு குலத்திற்குரிய அரியணை ராமனுக்கு 14 ஆண்டுகள் தாமதித்துக் கிடைத்தபோதும் போற்றத்தக்க ராமராஜ்யம் பல ஆண்டுகள் நீடித்து நின்றது. அதே ஸமயம் ராமனின் பாதுகைக்கு அந்த ஸிம்ஹாஸனம் 14 ஆண்டுகள் கிட்டியதே! பாதுகாதேவியின் பாக்யம் தான் என்னே!

ஆளரிப்பிரானின் அதிசய ஆஸனம்

அஸுரக் குழந்தையைக் காக்க தூணிலிருந்து வெளிப்பட்ட சிங்கப்பிரானுக்கு யார் ஆஸனமிடுவது? சீற்றத்துடன் வந்த அந்த சிங்கம் இந்த நேரத்தில் தனக்கு வேண்டிய ஆஸனம் வாயிற்படியே என்ற முடிவுடன் வந்துவிட்டது. அவதாரத்துக்கேற்ற ஆஸனம்!

நீரஜாவிற்கு நீர் தந்த ஆஸனம்

ஒரு இல்லத்தின் தூணிலிருந்து வந்தவருக்கு அந்த இல்லத்தின் வாயிற்படியே ஆஸனமானதுபோல் ஆழ்கடலிலிருந்து ஆவிர்பவித்த பெரியபிராட்டிக்கு அந்நேரத்தில் அந்நீரிலேயே வளர்ந்து, மலர்ந்து நிற்கும் தாமரை மலரன்றோ ஆஸனமாயிற்று!

கண்ணனுக்கோர் கள்ள ஆஸனம்

இதை இட்டவன் துர்யோதனன்! இதன் காரணமாகவே 'கெடுவான் கேடு நினைப்பான்' என்னும் பழமொழிக்கு அவன் உதாரணமான சரித்ரத்தை பாரதம் நமக்குக் கூறும்!

கவி ஸிம்ஹம் காட்டிய ஆஸனம்

கைவிரல் நுனியே ஆயுதமாகும்போது எம்பெருமானுக்கு ஒரு கவியினுடைய நாவின் நுனியும் ஆஸனமாகாதோ?

ஸ்வாமி தேசிகன் தாம் அன்றாடம் செய்த திருவாராதனத்தில் எம்பெருமானுக்கு க்ரமப்படி பல ஆஸனங்களை ஸமர்ப்பித்த போதிலும் தம் ஆராத்ய மூர்த்தியாகிய பரிமுகப் பெருமானை **ஜிஹ்வாக்ர ஸிம்ஹாஸனம் அப்யுபேயா:** என்றபடி தன் நாவினையே ஆஸனமாக ஏற்று அதில் அமர வேண்டுமென ப்ரார்த்தித்தார். இவர் நா உடையவரன்றோ! கண்டாவதாரர்! பரமத நிரஸன காலத்தில் வீறு கொண்டு முழங்க வேண்டிய இவர் மது கைடபர்களை அழித்ததால் மதுவிஜயீ என இவரால் துதிக்கப்பெற்ற ஹயக்ரீவ பெருமானை தம் நாவில் வந்து அமரும்படி வேண்டியதும் பொருத்தம்தானே! அதேசமயம் 'காவ்யேஷு லலிதேஷு' என்றபடி லலிதமான பல காவ்யங்களையும் ஸ்தோத்ரங்களையும் பாடும்போது பாடவல்ல நாச்சியாரைத் நம் நாவில் அமர்ந்து நல் வாக்கினை அருளவேண்டும் என்பதாக **வாசம் ப்ரஸந்ந மதுராம் மம ஸம்விதேஹி** என்றல்லவோ ப்ரார்த்திக்கிறார்.

ஸ்ரீமத்ராமாயணத்தை இயற்றுகையில் ப்ரஹ்மாவின் அருளால், அவர் பத்னியான ஸரஸ்வதி தேவி அவர் நாவில் நின்று அருள் புரிவாள் என்றது ஸ்ரீ வால்மீகி பகவானுக்குக் கிடைத்த அரிய பெரிய வரமன்றோ!

நாம் பெறும் ஆஸனம்


திருமகளுக்குத்தன் திருமார்பில் ஆஸனம் தந்தருளிய எம்பெருமான் அடியார்களாகிய நமக்கும் தம்முடைய திருவுள்ளத்தில் ஓர் இடம் தந்து ரக்ஷிக்கிறான் என்பதுடன் பரமபதத்திலும் **அங்காகத குமார ந்யாயத்தாலே** என்று ஸ்வாமி தேசிகன் அருளியபடி தம் மடியிலேயே நம்மை அமர்த்திக்கொள்வார் என்பதும் நாம் பெறும் பெறும் பேறு அன்றோ!

Sponsorships and donations towards publication expenses are welcome





ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்












ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்











ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்











ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்











கண்ணுக்கினியன






ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்













ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்





கண்ணுக்கினியன





ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்











ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்





கண்ணுக்கினியன



ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்













ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்











ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்











ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்











திருப்பவித்ர உத்ஸவம்










திருப்பவித்ர உத்ஸவம்
















திருப்பவித்ர உத்ஸவம்












திருப்பவித்ர உத்ஸவம்






மஹாமஹோபாத்யாய மன்னார்குடி ராஜகோபாலாசார்யா பௌண்டேஷனின் விசேஷ விருது பெறும் தேவஸ்தான மணியகாரர் ஸ்ரீ வரதராஜன் ஸ்வாமி




ஸ்ரீ:

ஸ்ரீ அபயப்ரதாந ஸாரம் ⑨

அதிகாரம் 4 - ப்ரகரண தாத்பர்ய நிர்ணயः

விபீஷண சரணாகதியில் ப்ரபத்தியின் அங்கங்கள்

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

இதுவரை பாலகாண்டம் முதல் ஸுந்தரகாண்டம் வரையிலான சரணாகதி ப்ரகரணங்களை ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்தார். இனி இக்ரந்தத்தில் ப்ரதானமாகக் காட்டப்படும் விபீஷண சரணாகதி ப்ரகரணத்தை அருளிச்செய்கிறார்.

ராவணனுடைய தம்பியான ஸ்ரீ விபீஷணாழ்வான், தன்னுடைய தமையனுக்கு மீண்டும் மீண்டும் ஹிதோபதேசம் செய்து, அவன் அதனை ஏற்றுக்கொள்ளாமல் தன்னை அவமதித்தபோது, இலங்கை, பந்துக்கள், செல்வம் முதலிய அனைத்தையும் துறந்து, ஸமுத்ர கரையில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ராமபிரானை அடைந்தான்.

'இவன் நான்கு ராக்ஷஸர்களுடன் ஸமஸ்த ஆயுதங்களையும் தரித்து வந்திருக்கிறான். ராமா! இவன் உன்னைச் சரணமடைந்தவனாயினும் நம்பத் தகுந்தவனல்லன். இவன் ராவணனிடமிருந்து வந்திருப்பதால் இவனிடம் நம்பிக்கை வைக்கலாகாது. இவன் ராவணனால் அனுப்பப்பட்ட வேவுகாரனாக இருக்கக் கூடும். இவர்கள் தங்கள் சொந்த பெயர்களையும் ஸ்வரூபத்தையும் மறைத்து நம்மிடம் இனிமையாகப் பேசி அனுகூலர் போல் நடித்து நம்மை வஞ்சித்து நமக்குத் தீங்கிழைக்க வல்லவர்கள். அவ்வகையில் விபீஷணன் நம்மை வஞ்சிக்க வந்தவனே. ஆதலால் அவனை ஏற்றுக்கொள்ளலாகாது. இவன் வேவு பார்க்க மட்டும் வந்தவனல்லன். ஸமயம் பார்த்து உன்னையும் லக்ஷ்மணனையும் கொல்லும்படி ராவணனால் ஏவப்பட்டு வந்திருக்கக் கூடும்' என்று வானர வீரர்கள் அவனை ஏற்கவேண்டாமென்று பெருமாளுக்கு அறிவுறுத்தினர்.

ஸங்கல்பாத் ஏவ பகவாந் தத்வதோ பாவிதாத்மநாம் ।
வ்ரதாந்தமகிலம் காலம் ஸேசயத்யம்ருதேந து ।।

'தம்மை உள்ளபடியே த்யானம் செய்பவர்களுக்கு பகவான் தன் ஸங்கல்பத்தாலேயே எல்லாக்காலத்தையும் ஸுகமாகவே நடத்துகிறான்'.

ப்ரவ்ருத்தி காலாதாரப்ய த்வாத்மலாபாவஸாநிகம் ।
யத்ராவகாஸோ விக்நாநாம் வித்யதே ந கதாசந ।।

'ஈச்வரனை சரணமடைவதற்காக செய்யப்படும் முதல் ப்ரவ்ருத்தி ஆரம்பித்து பரமாத்மாவை அடையும் வரையில் எந்த விஷயத்திலும் தடை



களுக்கு ஒரு பொழுதும் இடம் கிடையாது' என்ற வார்த்தைகளுக்கிணங்க, பெருமாள் வானரர்களின் கலக்கங்களைத் தீர்த்து, விபீஷணாழ்வாரின் சரணாகதியை அங்கீகரித்தார்.

இப்ப்ரகரணத்தில், ப்ரபத்தியின் ஐந்து அங்கங்களும், அவற்றை ஒருங்கிணைக்கும் அங்கியான ஆத்மநிக்ஷேபமும் எவ்வாறு விபீஷணனிடத்தில் வெளிப்படுகின்றன என்பதை ஸ்வாமி தேசிகன் ஸ்பஷ்டமாக விவரித்தருள்கிறார்.

'எங்ஙனே என்னில்' என்று தாமே கேட்டுக்கொண்டு, ஒவ்வொரு அம்சத்தையும் ஸ்ரீமத்ராமாயண ப்ரமாணங்களைக் கொண்டு காட்டுகிறார்.

1. ஆநுகூல்ய ஸங்கல்பம் — பகவானுக்கு உகந்ததைச் செய்வது

விபீஷணனுடைய சரணாகதி, அவன் ராவணனுக்கு செய்த ஹிதோபதேசத்திலேயே ஆரம்பமாகிறது.

ஸீதா பிராட்டியை ஸ்ரீராமனிடம் ஒப்படைத்துவிட வேண்டும்; அவ்வாறு செய்தால் இலங்கையில் நாம் அனைவரும் ஸுகமாக வஸிக்கலாம் என்று விபீஷணன் ராவணனிடம் ஹிதம் சொல்கிறான். இது ராவணனுடைய நன்மையையும், அவனுடைய குலத்தின் நன்மையையும் கருதி கூறப்பட்ட ஹிதவசனம். இந்த ஹிதோபதேசமே ஆநுகூல்ய ஸங்கல்பம் — பகவானுக்கு உகந்ததையும், தர்மத்திற்கு உகந்ததையும் மட்டுமே செய்ய வேண்டும் என்ற முதலாவது அங்கத்தை வெளிப்படுத்துகிறது.

ஆனால் ராவணனுக்கு இந்த ஹிதம் உசிதமாகத் தோன்றவில்லை. மாறாக, அவனுடைய கோபமே அதிகரித்தது. விபீஷணனை நோக்கி, த்வாம் துதிக் குலபாம்ஸநம் – 'நீ என் குலத்தைக் கெடுக்க வந்தவன்' என்று அவனை நிந்தித்தான்.

2. ப்ராதிகூல்ய வர்ஜநம் — விரோதமானதைத் துறத்தல்

ராவணன் ஹிதவசனத்தை ஏற்றுக்கொள்ளாமல், ஸீதா பிராட்டியிடத்தில் செய்த அபராதத்திலிருந்தும் விலக மறுத்தபோது, பரமாபத்கதஸ்யாபி தர்மே மம கதிர் பவேத் - 'எனக்கு எந்த ஆபத்து நேர்ந்தாலும், என் மனது எப்போதும் தர்மத்திலே நிலைத்திருக்க வேண்டும்' - என்று ப்ரஹ்மாவிடத்திலும் தர்மிஷ்டஸ்த்வம் யதா வத்ஸ ததா சைதத் பவிஷ்யதி – 'குழந்தாய்! தர்மத்தில் நோக்குடைய நீ கேட்டபடியே ஆகட்டும்' - என்று எம்பெருமான் ராமனிடத்திலும் வரம் பெற்ற ஸ்ரீ விபீஷணாழ்வான், இனி ராவணனுக்கு உபதேசிப்பதும் பயனில்லை; அவனுடன் இருப்பதும் தகாது; அவனுடைய தொடர்பிலேயே இருப்பதும் தனக்கு வேண்டாம் என்று உறுதி செய்கிறான். அதன் பின்னர், த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச என்று, பிள்ளைகள், மனைவி, நண்பர்கள், செல்வங்கள் முதலியவற்றைத் துறந்து, ராவணனுடைய ஆட்சியில் இருக்கும் இலங்கையையும் துறந்து,

ஆஜகாம முஹூர்த்தேந யத்ர ராம: ஸலக்ஷ்மண: - 'லக்ஷ்மணனுடன் ஸ்ரீராமன் எழுந்தருளியிருந்த ஸமுத்ரத்தின் அக்கரைக்கு ஒரு முஹூர்த்த காலத்தில் வந்து சேர்ந்தான்'.

சரணாகதி என்பது பகவானை நோக்கி வருவதோடு மட்டுமின்றி, பகவத் ப்ராப்திக்கும் பகவதநுபவத்திற்கும் விரோதமானவற்றை விட்டு விலகுவதும் என்றதனால் இங்கே ப்ராதிகூல்ய வர்ஜநம் சொல்லப்பட்டது.

3. கார்ப்பண்யம் — தன்னுடைய அசக்தியை உணர்தல்

துர்வ்ருத்தனான ராவணனுடன் தனக்கு விரோதம் ஏற்பட்டுவிட்டதென்றும் அவனைப் பிரிந்து வந்து விட்டதாகவும், இதனால் தான் போக்கற்ற நிலையிலும் வேறு கதி இல்லாமலும் இருப்பதாக ஸ்ரீ ராமனுடைய ஸந்நிதிக்கு வந்த விபீஷணன், தன்னுடைய நிலையை விஜ்ஞாபிக்கிறான். தான் இருக்கும் நிலையை ஸ்பஷ்டமாக அறிவித்ததால் கார்பண்யம் சொல்லப்பட்டது. தன்னால் தனக்கென ஒரு உபாயத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியாது; தன்னைத் தானே ரக்ஷித்துக் கொள்ளும் ஸாமர்த்யம் இல்லை என்ற நிலையே கார்பண்யம்.

4. மஹாவிச்வாஸம் — எம்பெருமான் ரக்ஷித்தே தீர்வான் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை

அடுத்து ஸ்வாமி தேசிகன் மஹாவிச்வாஸத்தை எடுத்துக் காட்டுகிறார்.

விபீஷணன் இலங்கையிலிருந்து ஸ்ரீ ராமன் இருக்கும் இடத்திற்கு அஞ்சவேண்டும் ப்ரதேசத்திலே அசங்கிதமாக தன்னிலமாக நினைத்து வருகையாலும் - எதிரியின் ப்ரதேசத்திற்கு எந்தவொரு அச்சமும் ஸந்தேஹமும் இன்றி வந்ததால் இங்கே மஹாவிச்வாஸம் சொல்லப்பட்டதாக ஆசார்யன் அருளிச்செய்கிறார்.

ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே ।
நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணம் உபஸ்திதம் ।।

'விபீஷணன் என்கிற நான் வந்திருக்கிறேன். ஸகல ஜீவகோடிகளுக்கும் ரக்ஷகனும் மஹாத்மாவுமான ரகுவீரனிடத்தில் என்னை ஸமர்ப்பியுங்கள்' என்றான் விபீஷணன்.

ஸர்வ லோகங்களுக்கும் ரக்ஷகன் ஸ்ரீராமன் என்பதால் அவரிடம் - 'இவன் நம்மை ரக்ஷித்தே தீர்வான்' என்ற த்ருடமான நம்பிக்கையோடு அவன் அடைந்ததால் இங்கே மஹாவிச்வாஸம் வெளிப்படுகிறது.

விபீஷணோ மஹாப்ராஜ்ஞ: — வால்மீகி பகவான் 'மஹா' என்று விபீஷணனுடைய புத்தியைக் கொண்டாடுகிறார். அதாவது சிறந்த புத்தியுடன் கார்யம் செய்பவன் - ராமன் நம்மைக் கட்டாயம் ரக்ஷிப்பான் என்ற அசைக்கமுடியாத பெரியதான நம்பிக்கையுடன் அவன் செய்த சரணாகதியே அந்த



கார்யம் - என்று அவன் புத்தியை 'மஹத்' சப்தத்தினால் விசேஷணமிட்டுக் குறிப்பிடுகிறார்.

5. கோப்த்ருத்வ வரணம் — 'நீரே எனக்கு உபாயம்'

த்டுத்து உபாய வரணம் அல்லது கோப்த்ருத்வ வரணம் காட்டப்படுகிறது.

ராகவம் சரணம் கத: - என்று ராமனைச் சரணமாக அடைந்தான் விபீஷணன்.

சரணம் என்ற சப்தம் உபாயத்தையும், மேலே உள்ள கத: என்ற சொல் ஜ்ஞானம் என்ற அர்த்தத்தையும் தருகிறது. கதி - உபாயம் என்று அர்த்தம் தருகிற சொல் புத்தி என்ற பொருளைத் தருகிறது என்ற ந்யாயப்படி இந்த கதி சப்தம் புத்தியைக் குறிக்கிறது. ஆகவே இங்கே விபீஷணன் ராகவனைச் சரணமாக அடைந்தான் என்று கொள்ளாமல் ராமனை உபாயமாக அறிந்தான் / வரித்தான் என்றே கொள்ள வேண்டும்.

ஆகவே விபீஷணன் ராமனை அடைந்தது, வெறுமனே ஒரு ரக்ஷகனை நாடியது மட்டுமல்ல; 'எனக்கு நீரே உபாயமாக வேண்டும்' என்று பகவானையே மோக்ஷோபாயமாக வரித்துக் கொள்வதாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. கோப்த்ருத்வ வரணமாவது - அகிஞ்சநனாகிய சேதநனுக்கு, வேதங்களில் கூறப்பட்டுள்ளமற்றொருஉபாயமானபக்தியோகத்தை அனுஷ்டிப்பதற்கு சக்தி இல்லாத நிலையில், அந்த உபாயத்தின் ஸ்தானத்தில் பகவானே இருந்து தன்னை ரக்ஷிக்க வேண்டும் என்ற ப்ரார்த்தனையே. அதாவது, 'நான் உம்மை அடைகிறேன்' என்பதைக் காட்டிலும் 'பக்தியோக நிரபேக்ஷனாக இருந்து நீரே என்னைக் ரக்ஷிக்க வேண்டும்; நீரே எனக்கு உபாயமாக வேண்டும்' என்பதே. ஆக ராகவம் சரணம் கத: என்கிறவிடத்தில் விபீஷணனின் உபாய வரணம் வெளிப்படுவதாக ஸ்வாமி தேசிகன் இங்கே நிர்தாரணம் பண்ணுகிறார்.

ஆத்ம நிக்ஷேபம் — ப்ரபத்தியின் அங்கி

இனி, ஆத்ம நிக்ஷேபம் என்ற அங்கி இருக்கும் இடத்தைக் காட்டியருள்கிறார் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன்.

ஸ்ரீமத் ராமாயணத்தில் விபீஷணன் அங்கு ராமஸந்நிதியில் கூடியிருந்த வானரர்களை நோக்கி, நான் (விபீஷணன்) வந்துள்ளதை ஸ்ரீ ராமனுக்கு விஜ்ஞாபனம் செய்துகொள் என்று சொல்லுவதால் விபீஷணனுடைய ஆத்ம நிக்ஷேபம் சொல்லப்படவில்லையே என்று நினைக்கக் கூடாது. இங்கே மூலத்தில் ஸ்வாமி ஸ்ரீ தேசிகனே இங்குள்ள நிவேதயத என்ற சொல்லுக்கு விஜ்ஞாபனம் என்று பொருள் சொல்லக்கூடாது என்பதை காரணத்துடன் அருளிச்செய்துள்ளார்.

(ஸ்வரேண மஹதா — பெருங்குரலுடன்) பெருங்குரலுடன் (விபீஷணன் வரும்போது) வந்தான் என்று சொல்லுவதால் இவன் வந்துள்ளான் என்பது அவனுடைய குரலாலேயே தெரியும் ஸ்ரீராமனுக்கு.

ஆகவே நிவேதயத என்ற பதம் 'என்னை ஸமர்ப்பியுங்கள்' என்று அர்த்தத்தைத்தான் சொல்லுகிறது என்று கொள்ளவேண்டும்.

தானே செய்ய வேண்டிய பர ஸமர்ப்பணத்தை கடகர்கள் உள்ள இடத்தில் அவர்களை முன்னிட்டுக்கொண்டு அனுஷ்டிப்பது உசிதமாகையாலே, இங்கும் விபீஷணன் அங்குள்ள வானரங்களை முன்னிட்டுக்கொண்டு தன் ஆத்மாவை ஸமர்ப்பிக்கிறான் என்று அருளுகிறார்.

'ஆக இப்படி ஆநுகூல்ய-ஸங்கல்பாதி-யுக்தையாய் பரிபூர்ணையாய், த்வயத்தில் பூர்வ-கண்டத்திலே சொல்லப்படுகிற ஸ்வ-ரக்ஷா-பர- ஸமர்பணாத் மிகையான ப்ரபத்தியை ஸர்வாவஸ்தையிலும் தர்ம-ஸாரத்திலே நிலைகுலையாத ஸ்ரீவிபீஷணாழ்வான் அநுஷ்டித்தான்' என்று மூலத்தில் அருளி ஸ்ரீவிபீஷணாழ்வான் சரணாகதியில் அமைந்த அங்கபூர்த்தியை ஸ்வாமி தேசிகன் இங்கே தலைக்கட்டுகிறார். ❊

ஐப்பசியில் முக்கிய உத்ஸவங்கள்

ஸ்ரீ தேசிகன் 27-ம் நாள் விடாயாற்றி புஷ்ப பல்லக்கு புறப்பாடு
அக்டோபர் 19 (திங்கள்)

மஹாநவமி & சரவணம்
அக்டோபர் 20 (செவ்வாய்)

விஜயதசமி & பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்
அக்டோபர் 21 (புதன்)

பேயாழ்வார் திருநக்ஷத்ரம்
அக்டோபர் 22 (வியாழன்)

தீபாவளி உத்ஸவம்
நவம்பர் 8 (ஞாயிறு)

அன்னகூட உத்ஸவம்
நவம்பர் 10 (செவ்வாய்)

ஸேனைநாதன் திருநக்ஷத்ரம்
நவம்பர் 14 (சனி)

கலியன் உத்ஸவம் (10 நாட்கள்)
நவம்பர் 15 (ஞாயிறு) முதல் 24 (செவ்வாய்) வரை

பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்
நவம்பர் 16 (திங்கள்)

ஸ்ரீ:

ஆயர் மடமகள் அநுபவம்

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

குழற்கோவலர் மடப்பாவையும் மண்மகளும் திருவும்
நிழல் போல்வனர் கண்டு நிற்குங்கொல்? மீளுங்கொல்
- தண்ணந்துழாய்
அழல் போலடுஞ் சக்கரத்தண்ணல் விண்ணோர்
தொழக்கடவும்
தழல் போல் சினத்த அப்புள்ளின்பின் போன
தனிநெஞ்சமே.
(திருவிருத்தம் - 3)

எம்பெருனுடனே வர்திக்கும் வேதரூபியான ஸ்ரீகருடன்பால் வயப்பட்ட தனது நெஞ்சமானது அவனைத் தொடர்ந்து செல்ல, அங்கு ஸ்ரீமந்நாராயணனுடன் அவனது நிழலென இருக்கும் ஸ்ரீதேவி பூமிதேவி மற்றும் நீளா பிராட்டியருடனான சேர்த்தி அழகினைக் கண்டவுடன் அவர்கள்பால் மயக்கம் கொண்டது. மயக்கம் தெளியாது அடியாளது நெஞ்சமானது அந்த தேவியரிடத்தேயே நின்று விடுமா அல்லது மீண்டு அடியாளை வந்தடையுமா என்று நாயகி பாவத்தில் வ்யஸனப்படுகிறார் ஆழ்வார்.

ஸ்ரீவைஷ்ணவக் கோயில்களில் அர்ச்சா மூர்த்தியின் இருபுறமும் ஸ்ரீதேவியும் பூமிதேவியும் அவனுடனே ஒன்றாக ஸேவை ஸாதிப்பர். இவ்விரு மஹிஷிகளுக்கு இணையான ஏற்றத்தினை உடையவள் நீளாதேவி. ஸ்ரீதேவியினுடைய அவதாரம் ஸீதா ருக்மிணி பிராட்டிமார் எனில், பூதேவியுடைய அவதாரம் கோதை நாச்சியார். நீளாதேவியின் அவதாரம் நப்பின்னைப் பிராட்டி என்பதனாலேயே ஏறு தழுவல் எனப்படும் ஆயர்களின் சடங்கினை வ்யாஜமாகக் கொண்டு ஸ்ரீக்ருஷ்ணனாக அவளை விவாஹம் புரிந்தான் அவளது நாயகன்.



ஆழ்வார்கள் தங்களது பல பாசுரங்கள் மூலம் நப்பின்னைப் பிராட்டியின் ஏற்றத்தினைப் பறை சாற்றுகின்றனர். நப்பின்னைப் பிராட்டியினைப் பற்றின ஸ்வாரஸ்யமிகு ஆழ்வார் பாசுரங்களில் அந்வயித்து அவளது திவ்ய ஸ்வரூபம் அறிவோம்.

மூவர் மணாளன் நாரணன்

ஸ்ரீமந்நாராயணனின் திவ்ய மஹிஷிகள் மூவர். அதர்மத்தினை அழித்து தர்மத்தினை ஸ்தாபனம் பண்ணுவதற்கென எம்பெருமான் அவதரிக்கும் போதெல்லாம் ஸ்ரீதேவியும் அவனுடனே அவதரிக்கிறாள். வராஹாவதாரத்தில் எம்பெருமான் பூமிதேவியை அஸுரனிடமிருந்து மீட்டு ஆச்ரிதர் உய்ய வழி கோலுகிறான். மூன்றாவதாக அமைந்த நீளாதேவி க்ருஷ்ணாவதாரத்தில் கோதை நாச்சியார் கொண்டாடும் நப்பின்னைப் பிராட்டி.

எம்பெருமானின் மூன்று திவ்ய மஹிஷிகளைப் பற்றி திருவாய்மொழியில் பல பாசுரங்கள் ஸாதித்து நப்பின்னைப் பிராட்டியின் ப்ரபாவத்திற்குக் கட்டியம் கூறுகிறார் நம்மாழ்வார்.

கூந்தல் மலர்மங்கைக்கும் மண்மடந்தைக்கும் குலவாயர் கொழுந்துக்கும் கேள்வன் தன்னை (5-6-11) என்று ஸேவித்து, மலர்மகள், மண்மகள், ஆயர்குல மகள் என மூவருக்கும் எம்பெருமானே மணாளன் என்பதை காண்பித்துக் கொடுக்கிறார். **உடனமர் காதல்மகளிர் திருமகள் மண்மகள் ஆயர் மடமகள் என்றிவர் மூவர் ஆளும் உலகமும் மூன்றே** (1.9.4) என்று ஸாதித்து, மூன்று திவ்ய மஹிஷிகளும் ஸமமான ப்ரபாவத்தினை உடையவர்கள் என்பதை நிஷ்கர்ஷம் பண்ணுகிறார்

கேயத்தீங்குழல் ஊதிற்றும் நிரை மேய்த்ததும்
கெண்டை ஒண்கண் வாசப்பூங்குழல் பின்னை
தோள்கள் மணந்ததும் மற்றும்பல மாயக்கோலப்பிரான்
தன் செய்கை நினைந்து மனம் குழைந்து நேயத்தோடு
கழிந்தபோது எனக்கெவ்வுலகம் நிகரே? (6-4-2)

ஸ்ரீக்ருஷ்ணனாக அவதரித்தக்கால் எம்பெருமான் குழல் ஊதியதையும், ஆநிரை மேய்த்ததையும், பின்னையினை விவாஹம் முடித்ததையும் மற்றும் பற்பல திவ்யசேஷ்டிதங்களையும் மனதினால் ஸ்மரிப்பதை விடவும் மேலான ஸுகத்தினை வேறெந்த உலகத்தினால் தந்திட முடியும் என்று வினவுகிறார் ஆழ்வார். ஸ்ரீராமனாக ஸீதா பிராட்டியையும் ஸ்ரீக்ருஷ்ணனாக ருக்மிணிப் பிராட்டியையும் விவாஹம் முடித்தது போன்ற ஏற்றமுடையது நப்பின்னைப் பிராட்டியுடனான எம்பெருமானின் திருக்கல்யாணம்.



பின்னை கொல்? நிலமாமகள் கொல்? திருமகள் கொல்? பிறந்திட்டாள்

என்ன மாயங்கொலோ? இவள் நெடுமாலென்றே
நின்றுகூவுமால்
முன்னி வந்தவன் நின்றிருந்துறையும்
தொலைவில்லிமங்கலம்
சென்னியால் வணங்கும் அவ்வூர்த்திருநாமம் கேட்பது
சிந்தையே. [6-5-10]

எம்பெருமான் மீது ஒரு பெண் கொண்ட வ்யாமோஹத்தினால் உண்டான நிலையினை வர்ணிக்கும் இந்தப் பாசுரம், அவனது ஸம்பத்தான ஸ்ரீதேவி இவள் தானோ? ஸம்பத்து விளை நிலமான பூமிதேவி இவள் தானோ? ஸுபிக்ஷம் அருளும் விளை நிலத்தின் பலமாய் இருப்பவளான நீளாதேவி (நப்பின்னைப் பிராட்டி) இவள் தானோ என்ற சீரிய பொருளினைக் கூறி, எம்பெருமானுக்கும் அவனது மூன்று திவ்ய மஹிஷிகளுக்குமான நிர்மலமான ஸம்பந்தத்தினை விளக்குகிறார்.

நப்பின்னைப் பிராட்டியின் எழிலுருவம்

அன்றாயர் குலக்கொடியோடு அணிமாமலர் மங்கையொடு அன்பளவி நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கு... (பெரிய திருமொழி 2-4-1) எனும் திருமங்கை மன்னனின் பாசுரம் நப்பின்னைப் பிராட்டி எம்பெருமானின் திருவுள்ளத்திற்கு பேருகப்பானவள் என்பதைக் அடிக்கோடிட்டுக் காட்டும்.

நீளாதேவியின் திருமேனி நிறம் ஊதா.

துப்புடை ஆயர்கள் தம்சொல்வழுவாது ஒருகால்
தூயகருங்குழல் நல்தோகைமயிலனைய
நப்பினை தன்திறமா நல்விடையேழவிய
நல்லதிறலுடைய நாதனும் ஆனவனே.
(பெரியாழ்வார் திருமொழி 1-6-7)

காடுகளூடுபோய்க் கன்றுகள் மேய்த்து மறியோடி
கார்க்கோடல் பூச்
சூடி வருகின்ற தாமோதரா கற்றுத்தூளி காண்
உன்னுடம்பு
பேடை மயிற்சாயல் பின்னைமணாளா நீராட்டமைத்து
வைத்தேன்
ஆடி அமுது செய் அப்பனுமுண்டிலன் உன்னோடு
உடனேயுண்பான்.
(பெரியாழ்வார் திருமொழி 3-3-3)

செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல் நப்பின்னை நங்காய் (திருப்பாவை - 20) - ம்ருதுவான ஸ்தனங்களையும், சிவந்த இதழ்களைக் கொண்ட திருவாயினையும், சிறிய இடையினையும் கொண்டவள் நப்பின்னை என்பதை விவரிக்கும் கோதை நாச்சியாரின் பதங்கள் இவை.

ஆயர் மடமகள் பின்னைக்காகி அடல்விடை
ஏழினையும்
வீயப் பொருது வியர்த்து நின்றானை மெய்ம்மையே
கண்டாருளர். (பெரியாழ்வார் திருமொழி 4-1-4)

ஸங்கல்ப மாத்ரத்தில் விஷயங்களைக் கைக்கொள்ள வல்லவனான எம்பெருமான் நப்பின்னைப் பிராட்டியை விவாஹம் முடிக்க **ப்ரயத்தனப்பட்டு** ஏழு எருதுகளுடன் போர் புரிந்து அவற்றை வீழ்த்தின போதில் அவனது திருமேனியில் வியர்வைத் துளிகள் வழிந்தன. அவனை இந்த திவ்யமான திருக்கோலத்தில் கண்டவர் எவரும் உள்ளனரோ என்று வியக்கிறார் ஆழ்வார். வியர்த்து நிற்குமளவிற்கானது நப்பின்னைப் பிராட்டி மீதான எம்பெருமானின் வ்யாமோஹம் என்பதைக் காண்பிக்கும் ரஸமிகு பாசுரமிது.

ஸ்ரீதேவி, பூமிதேவி போலவே நீளாதேவியின் திருவுருவமாகும் நப்பின்னையின் ஸௌந்தர்யம் அவளது நாயகனின் திருவுள்ளத்திற்கு மிக உகப்பானது என்பதைக் காண்பித்தது யசோதை பாவத்தில் பெரியாழ்வார் ஸாதித்த கீழ்க்கண்ட பாசுரம்

பூணித் தொழுவினில் புக்கு புழுதியளைந்த
பொன்மேனி
காணப் பெரிதும் உகப்பன் ஆகிலும் கண்டார் பழிப்பர்
நாணைத்தனையும் இலாதாய் நப்பின்னை காணில்



சிரிக்கும்
மாணிக்கமே என் மணியே மஞ்சனமாட நீவாராய்.
(பெரியாழ்வார் திருமொழி 2-4-9)

நப்பின்னையினைக் கண்டக்கால் அவளது நாயகனுக்கு பேருகப்பு என்பதைக் கூறும் **நப்பின்னை காணில் சிரிக்கும் மாணிக்கமே** எனும் அழகிய ரஸம் மிகுந்த பதங்கள், அவள்பால் அவன் கொண்ட வ்யாமோஹத்தினைக் காண்பித்தன.

பின்னை மணாளன் என்னும் சிறப்பு

ஸ்ரீபதி என்பதனாலேயே ஸ்ரீமந்நாராயணனுக்கு ஏற்றம். அது போலவே **பின்னை மணாளன்** என்பதே அவனது திருவுள்ளத்திற்கு உகப்பு என்றுரைக்கும் ஆழ்வார் பாசுரங்கள் பல.

தோளி சேர் பின்னை பொருட்டு எருதேழ் தழீஇக்
கோளியார் கோவலனார் குடக்கூத்தனார்
தாளிணை மேலணி தண்ணந்துழாயென்றே
நாளுநாள் நைகின்றதால் என்தன் மாதரே.
(திருவாய்மொழி 4-2-5)

அனைத்தையும் தனது அதீனத்தில் கொண்டவனான எம்பெருமான், நப்பின்னைப் பிராட்டியை அடைவதற்காகவே பலமிகுந்த ஏழு எருதுகளை அடக்கி ஆண்டான் என்பதை **பின்னை பொருட்டு** எனும் பதங்கள் உணர்த்தும்

வேயின் மலிபுரைதோளி பின்னைக்கு மணாளனை
ஆயபெரும்புகழ் எல்லை இலாதன பாடிப்போய்...
(திருவாய்மொழி 3-9-8)

பின்னை மணாளனைப் பேரில் கிடந்தானை
முன்னையமரர் முதல் தனிவித்தினை...
(பெரியாழ்வார் திருமொழி 2-5-1)

என் திரு மகள்சேர் மார்வனே! என்னும் என்னுடைய
ஆவியே! என்னும்
நின் திருஎயிற்றால் இடந்து நீ கொண்ட நிலமகள்
கேள்வனே! என்னும்
அன்றுருவேழும் தழுவி நீ கொண்ட
ஆய்மகள் அன்பனே! என்னும்...
(திருவாய்மொழி 7-2-9)

அகலகில்லேன் இறையுமென்று ஸ்ரீதேவியை ஸதாஸர்வ காலமும் உன் திருமார்பிலேயே ஏந்தியிருப்பவனே **(திருமகள்சேர் மார்பன்)** என்றும், உன்னுடையவளான பூமிதேவியை மீட்டு கோரைப்பல்லின் நடுவே ஏந்தி நின்றவனே **(நிலமகள் கேள்வன்)** என்பதாகவும் இரண்டு தேவியரைக் கொண்டாடியதோடு, ஸர்வசக்திமானான நீ ஏறு தழுவுதல் என்பதை வ்யாஜமாகக் கொண்டு நீளாதேவியினை விவாஹம் புரிந்தாயே என்றதன் மூலம், **ஆய்மகள் அன்பன்** என்பதே அவனுக்கு ஏற்றம்.

புருஷகார பூதையாகும் நப்பின்னை

பிராட்டியுடனான எம்பெருமானே உபேயம் (அடையப்பட வேண்டிய ஸம்பத்து). பிராட்டியானவள் ஆச்ரிதர் சென்றடைய வேண்டிய உபேயமாவதுடன் எம்பெருமானைப் போலவே அதற்கான உபாயமுமாகிறாள். உபாய தசையில் பிராட்டிக்கும் அந்வயமுண்டு என்பதை நமது இதிஹாச புராணங்கள் நிஷ்கர்ஷிக்கின்றன.

உதாஹரணமாக, பூமிதேவியைச் சரணடைந்தால் வாரஹப்பிரானை அடையலாம். ஸீதா பிராட்டியின் புருஷகாரம் ஸ்ரீராமன் திருவடியினை அடைவதற்கான உபாயம். அது போலவே, ஸ்ரீக்ருஷ்ணனை அடைய வேண்டுமென்றால் நப்பின்னைப் பிராட்டியைச் சரணடைதல் வேண்டும்.

மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல் என்றுரைத்த பூமிப்பிராட்டியின் அம்சமான கோதை நாச்சியார், உபாய தசையிலும் பிராட்டிக்கு அந்வயமுண்டு என்பதை அழுந்தக் கூறுகிறாள். நப்பின்னையின் திருவடி பணிந்து அவளிடம் புருஷகாரம் பண்ணுமாறு ப்ரார்த்திப்பதே ஸ்ரீக்ருஷ்ணனை அடைவதற்கான உபாயம் என்பதைத் திருப்பாவையின் மூன்று பாசுரங்கள் மூலம் தெளிவுற உணர்த்துகிறாள்.

உந்துமதகளிற்றன் ஓடாத தோள்வலியன் நந்தகோபாலன் மருமகளே **நப்பின்னாய்** கந்தம் கமழும் குழலீ கடை திறவாய்ஊ என்றுரைத்து எம்பெருமானை அடைவதற்கான வழி கோலுகிறாள்.

குத்து விளக்கெரிய பாசுரத்தில், **மைத்தடங்கண்ணினாய்** நீயுன் மணாளனை எத்தனை போதும் துயில்லெழ ஒட்டாய் காண் எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால் தத்துவமன்றுஊ - எம்பெருமானைத் துயிலெழுப்பித் தங்களைக் கடாக்ஷிக்குமாறு செய்ய வேண்டுமென்று நப்பின்னையிடம் ப்ரார்த்திப்பதாக அமையும் இந்தப் பாசுரம் உபாய ஸ்தானத்தில் பிராட்டியின் பங்கினைக் காண்பிக்கும்

செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் **விமலா துயிலெழாய் நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்** உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை இப்போதே எம்மை நீராட்டுஊ - திருவின் மறு உருவமாகும் நப்பின்னைப் பிராட்டியினை முதலில் துயிலெழுப்பி அவளது நாயகனையும் துயிலெழுப்புமாறு வேண்டுவதுடன், எம்பெருமானை அடைவதென்ற தங்களது நோன்புக்குத் தேவையானவற்றையும் அநுக்ரஹிக்குமாறு ப்ரார்த்திக்கிறாள் - புருஷகாரத்தினை ப்ரார்த்திப்பது.

ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே பரதேவதை. அவன் திருவடியல்லாது புகலொன்று வேறொன்றில்லை. அவனொருவனே மோக்ஷப்ரதன். வேறெவருக்கும் மோக்ஷம் அநுக்ரஹிக்க சக்தியோ வல்லமையோ கிடையாது. பிராட்டியுடனான எம்பெருமானை (ஏக மிதுனம்) அடைவதே ஏக லக்ஷ்யம். அவனையடையவதற்கு அவனது பிராட்டிமாரின் கடாக்ஷமும் புருஷகாரமும் அவச்யம். **அந்தண்துழாய் கமழ்தல் இவள் நேர்பட்டதே மாயப்பிரான் திருவருளாம் அன்றி மற்றோரு உபாயமென்** (திருவாய்மொழி 8-9-10) என்ற ஆழ்வார் திருவாக்கினை மனமார உணர்ந்து, அவனது திவ்யமஹிஷிகளின் திருவடி பணிந்து ப்ரார்த்திப்பதே அவர்களது நாயகனை அடைவதற்கான லகு உபாயமாகும். ❊

ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் **'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'** இயங்கி வருகிறது.



முகவரி மற்றும் விவரங்களுக்கு:

'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'

9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,

மயிலாப்பூர், சென்னை - 600004.

☎ : 044 - 4322 9401.

GPAY மூலம் பணம் செலுத்தும் வசதி உள்ளது.

நிர்வாகம்: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை - 600004.

ஸ்ரீ:

Important Tenets Of Our Sampradaya (43)

A Thousand Names — Gateway Of Infinite Grace

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

The fact that Sriman Narayana is The Supreme has been unequivocally established by Sri Vaishnava Acharyas, drawing extensively from the Vedas, Saasthras, Ithihaasas, Puranas and other time-tested scriptures. He is the means and end of all beings. He is the protector and benefactor of the whole world. His auspicious virtues (திருக்கல்யாண குணங்கள்) are countless and His glory limitless.

Perhaps, because of this, the Lord has given us a Thousand Names (Sahasra Naamam) of His through Bhishma for us to sing His greatness, at least to some extent. The grandsire was in his deathbed after having been pierced by arrows all over the body in the Kurukshethra war. He was waiting for the advent of Utharaayanam to breathe his last. The power of his will and penance helped him stay alive till such time Dakshinaayanam gave way to Utharaayanam.

It was during this period that Bhishma composed the famous Vishnu Sahasranaamam and Bhishma Sthuthi and they formed part of the Mahabharatha as narrated by sage Vyasa.

With Bhishma's death, an era of great wisdom and knowledge was about to come to an end. Hence, Krishna advised Yudhishtira to seek Bhishma's counsel on any and all aspects of life. The resultant dialogue was witnessed by both Vyasa and Krishna.

Yudhishtira posed questions such as 'Who is the ultimate Supreme reality', 'by worshipping whom a man attains salvation' and 'what is the easiest way by which mankind can get everlasting happiness, eternal peace and become free from misery and sorrow'. Bhishma's only answer to all these questions was 'Vishnu' and he mentioned thousand names of the Lord, in the process. This is the origin of Sahasra Naamam.

The uniqueness of these names is that even any of these names will bestow as much auspiciousness as the Lord Himself. The names are as powerful as their owner.

Reciting and even hearing the masterpiece comprising the Lord's glorious names eradicates all evils and bestows auspiciousness. The significance of 'Naama Sankeerthanam' was derived from this. Naama Sankeerthanam, in turn, will eventually pave the way for the ultimate goal — Saranaagathi. That is why the Lord's names are held in such high esteem in our Sampradaya.

Azhwars and our Acharyas have expressed the greatness of the Lord's names in no uncertain terms. As many as nine Azhwars have sung the glory of these great names. The following is a sample list:

Poigai Azhwar

...ஆயிரம் பேர்ச் செங்கண் கரியானைக் கை தொழுதக்கால். (Mudhal Thiruvanthaadhi - 65)

"Karmas will not occur on those who worship the Lord with a thousand names."

...நாமத்தால் ஏத்துதிரேல் நன்று. (Mudhal Thiruvanthaadhi - 70)

"If You can praise Him by singing His names, it is well done."

Bhuthath-Azhwar

ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன் தன் நாமங்கள்... (Irandaam Thiruvanthaadhi - 2)

"If we chant with knowledge Narayana and His many other names, it will secure us a place beside Him."

Peyazhwar

நாமம் பல சொல்லி நாராயணா என்று... (Moonraam Thiruvanthaadhi - 8)

"Let us praise Him with folded hands, chanting Narayana and His many other names."

Thirumazhisai Azhwar

செவிக்கு இன்பமாவதுவும் செங்கண்மால் நாமம்... (Naanmukan Thiruvanthaadhi - 69)

"Sweet to the ears are the Lord's Names."

...நின் நாமதேயம் இன்னதென்ன வல்லம் அல்ல... (Thiruchandha Viruththam - 13)

We are incapable of knowing You by any one particular name (of the many)...

Nammazhwar

...கனியின்மையின் கருக்காய் கடிப்பவர் போல் திருநாமச்சொல் கற்றனமே. (Thiruviruttham - 64)

"We too, not quite blessed with ripe fruit, that is, the Rug Veda, bit (learned) raw fruit, that is, the Lord's names."

அடர் பொன் முடியானை ஆயிரம் பேரானைஞ் இடர் கடியும் மாதா பிதுவாக வைத்தேன்... (Periya Thiruvanthaadhi - 70)

"One with a thick golden crown and a thousand names... I regarded Him as my mother and father"

...பேரும் ஓராயிரம் பிற பல உடைய எம்பெருமான்... (Thiruvaimozhi 1-3-4)

"The Lord who has a thousand different names."

...பணங்கொள் அரவணையான் திருநாமம் படிமினோ... (Thiruvaimozhi 4-1-8)

"Recite the names of the one on the hooded serpent."

...பாடீர் அவன் நாமம் வீடே பெறலாமே. (Thiruvaimozhi 10-5-5)

"If you sing His names you can secure liberation."

நண்ணினம் நாராயணனை நாமங்கள் பல சொல்லி... (Thiruvaimozhi 10-6-3)

"We attained Narayana by chanting His many names."

Periyazhwar

...தொண்டக் குலத்தில் உள்ளீர் வந்து அடி தொழுது ஆயிர நாமம் சொல்லி... (Periyazhwar Thirumozhi 1-1-5)

"Those of you who are in the lineage of devotees, fall at His feet chanting His thousand names."

...நல்வகையால் நமோ நாராயணா என்று நாமம் பல பரவி... பல்லாண்டு கூறுவனே. (Periyazhwar Thirumozhi 1-1-11)

"I shall, in the right way, chant Your name Narayana... and wish You well."

...ஓவாதே நமோ நாரணா என்றுஞ் அன்று எனக்கவை பட்டினி நாளே. (Periyazhwar Thirumozhi 5-1-6)

"The day on which I didn't chant Namo Narayana... is a day of starving for me."

Andal

...மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய். (ThirupPaavai - 9)

"Chant His many names such as Maamaayan, Madhavan, Vaikunthan, etc."

Thondar AdipPodi Azhwar

...நரகமே சுவர்கமாகும் நாமங்கள் உடைய நம்பி... (Thirumaalai - 12)

"The Lord has names which can turn even the hell into the heaven."

Thirumangai Azhwar

...இமையோர்கள் பேர்களாயிரம் பரவி நின்று அடி தொழும் பிரிதி சென்று அடை நெஞ்சே. (Periya Thirumozhi 1-2-8)

"O, heart, reach ThirupPiridhi, where the celestials chant the Lord's thousand names and surrender unto His feet."

...பேர் ஆயிரமும் ஓதுமின்கள் (Periya Thirumozhi 1-5-10)

"Chant the thousand names."

நாமம் பலவுமுடை நாரண நம்பி... (Periya Thirumozhi 10-8-4)

"Narayana is the Lord with many names..."

...பேராளன் பேரான பேர்கள் ஆயிரங்களுமே பேசீர்களே. (Periya Thirumozhi 11-6-5)

"Say the thousand names of the Lord."

That Madhurakavi Azhwar and ThirupPaan Azhwar do not figure in the above list is not surprising - the former sung only on Satakopa, his Acharya, and the latter got immersed in the narration of Lord Ranganatha's form. However, Kulasekhara Azhwar's absence is a matter of intrigue.

Of course, the above is not an all-inclusive list and contains only some of the impromptu references emphasising the importance of the Lord's names. There are a few decades dedicated to the greatness of His names, such as, போய்ப்பாடு (Periyazhwar Thirumozhi 2-3), காசும் கறையுடை (Periyazhwar Thirumozhi 4-6), வாடினேன் வாடி (Periya Thirumozhi 1-1), கேசவன் தமர் (Thiruvoymozhi 2-7), etc.

Sri Andal's penchant for the Dwaadasa Naamas is evident as she has sprinkled them all through Naachiyaar Thirumozhi and, of course, Thiruppaavai in excess of 40 places in all. An analysis would reveal that all except Vishnu occur in Naachiyaar Thirumozhi, some of them a number of times. The term Vishnu has been used only as a reference to herself, as the daughter of Vittuchithar (as signature) in the final verses of some of the decades.

It may be noted that our elders have held that we should recite particular names of the Lord before some of our routines — Hari as we wake up, Govinda before we eat, Kesava when we start out, Madhava when we go to bed, etc.

Let us all call out the Lord's name as many times as possible during our daily routines, besides chanting the Sahasra Naamam regularly and receive the benefits accruing from it.

(to be continued…)

ஸ்ரீ:

Swami Desika – Master of Analogy (7)

100 Gems from Srimath Rahasya-thraya Saaram

Smt. Padmalatha Sridharan, Chennai

Analogical Gems 31 to 35

31. How a person rejoices upon seeing well-wishers, how he is apprehensive of his enemies and is indifferent towards others (Saasthreeya Niyamana Adhikaaram):

அநுகூலரைக் கண்டால் சந்தந குஸுமாதிகளைப் போலவும், நிலவு தென்றல் போலவும், அபிமத விஷயங்கள் போலவும் உகந்து வர்த்திப்பான். ப்ரதிகூலரைக் கண்டால் ஸர்ப்பாக்ரிகளைக் கண்டாற்போலே வெருவி வர்த்திப்பான். அநுபயரை கண்டால் காஷ்டலோஷ்டாதிகளைக் கண்டாற்போலே த்ருணவத்கரித்து வர்த்திப்பான்.

In this chapter, Swami Desika teaches us the 'Art of Living', so to say, as per Sri Ramanuja's philosophy. He reproduces verbatim Sri Bhashyakaara's final words before leaving for Sri Vaikunta -- A Prapanna has to spend his life learning and teaching Sri Bhashyam, Divya Prabandham, doing temple Kainkaryams, meditating upon Dhvaya Manthra, etc. as far as his capabilities would permit.

He will come across three types of people during his everyday life; namely, Bhagavathas/well-wishers (Sri Vaishnavas), those who hate God and those who don't fall into either of these categories. How does one behave towards them?

Upon seeing Bhagavathas he should rejoice like he is experiencing a soothing sandal paste, fragrant flowers, soft moonlight, cool breeze, etc. The second category of people warrant fear like serpents and wild animals. He should be indifferent towards ignorant people who form the third category, as one would be upon noticing small sticks or pebbles in the pathway. If these people show signs of interest, he might teach them the Concepts of Reality. If not, he should always be patient towards them and pity them reflecting upon what they are missing out on. (This can be taken as a cue as to how a Prapanna should conduct himself towards relatives and friends).

32. How an emperor would hate it if his son is insulted in his presence (Saasthreeya Niyamana Adhikaaram):

ஸார்வபௌமனாய் இருப்பானொரு ராஜாவினுடைய புத்திரனை ராஜஸந்நிதியிலே பரிபவித்தால் ராஜா வெறுக்குமாப் போலே



Now, Swami Desika explains the consequences vide three interesting analogies (starting with this one) if the three categories of people are not treated appropriately as prescribed above.

If Bhagavathas are ill-treated, the Lord becomes furious as they are His favourite children. So, if a Prapanna harms Bhagavathas for any reason whatsoever, he would incur the wrath of the Lord as surely as would one who insults the prince in the presence of the emperor.

33. How an emperor would feel compromised if his wife were to beg from others (Saasthreeya Niyamana Adhikaaram):

ராஜா ஸார்வபௌமனாயிருக்க ராஜமஹிஷி க்ஷுத்ரஜந்துக்கள் பக்கலிலே மடிப்பிச்சை புக்கால், ராஜாவுக்கு அவத்யமாய், அத்தாலே அவளை அவன் வெறுக்குமாப் போலே

If for any material reason, a Prapanna serves a person who hates God, it is similar to an emperor's wife

begging lowly commoners, which would seriously compromise the position of the emperor. Wouldn't he hate his wife then?

Similarly, a Prapanna is like a Royal Consort and has to behave in a befitting manner. When he has the Lord on his side, why would he need mere mortals or even other smaller deities? It would be viewed by the Lord with total disfavour if the Prapanna were to switch loyalties.

34. How an ignorant person cannot differentiate between a gem and a coloured stone (Saasthreeya Niyamana Adhikaaram):

ரத்நத்துக்கும் பாஷாணத்துக்கும் வாசியறியாதாப் போலே

If a Prapanna has to serve an ignorant person immersed in worldly pleasures, the Lord would conclude that the knowledge which made him perform Prapathi was not followed through and he would be deemed as an incompetent person who cannot differentiate between a gem and an ordinary stone. Irrespective of their status in society, Bhagavathas are the ones to be respected and served by the Prapanna.

35. How a person is let off with a thorn bite instead of a spear bite (Aparadha Parihaara Adhikaaram):

'வேலிட்டுப் பாயவேண்டுமது முள்ளிட்டுப் பாய்ந்து கழியு'மென்கிற கணக்கிலே

In this chapter, Swami Desika enumerates the things to be done by the Prapanna to right the wrongs that may possibly have been committed by him. It is comforting to note that through this analogy, the Acharya first assures us that we would not be punished — deservingly — once we have been



accepted through Prapathi.

Like the king who hands out differing punishments to various offenders taking into account their physical capabilities, workplace, relationship to him, etc., the Lord, with his inexhaustible quality of mercy, gives us a small punishment disproportionate to the nature of our offence — say a prick with a thorn instead of a plunge of the spear. A blind or lame person, a person who works in the queen's boudoir, a servant who carries the royal flag, etc. are dealt with leniently by the king and their crimes are pardoned with whipping, suspension, excommunication, etc. as the case may warrant, instead of capital punishment.

So, if it appears that a Prapanna is suffering from certain misfortunes during his life, it is only to save him from worse and to prevent him from committing further offences.a

(to be continued…)

ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான
(G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

★ ★ ★

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை 600 004.
: +91 77086 53799 ☎ : 044 - 24953799, 044 - 43863747



With Pranams:

S. Venkataramanan,
18/20, Kesava Perumal South Street,
Opp. Akshara Play School,
Mylapore, Chennai - 600 004.

SVDD thanks Sri S. Venkataramanan
for sponsoring this month's issue of Desika Sandesam





திருப்பவித்ர உத்ஸவ மஹாபூர்ணாஹுதியில் பௌண்டரீகபுரம்
ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீநிவாஸகோபால மஹாதேசிகன்











திருப்பவித்ர உத்ஸவ மஹாபூர்ணாஹுதியில் பௌண்டரீகபுரம்
ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீநிவாஸகோபால மஹாதேசிகன்











